858

...பாலால்—முதல்தர வைர வியாபாரிகள்.
...l. No. M. 916. 216, சைனபஜார் ரோட், சென்னை.

ஸ்ரீ:

வேதாந்ததீபிகை.

ஸம்புடம் 18] பிரபவஹு—ஐப்பசிமீ [ஸஞ்சிகை]

14 NOV 1927

பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.
வருஷ சந்தா ரூ. 3.] November 1927 [...

மு(100)

...ா தாய்தந்தையரைவிட
...க்கிக் காட்டி, அ...
...பச் ...செய்து, ஐஹிக
தா...யான ஸ்வர்க்கத்
...தமான ...ப்ரத்யகாத்
பரிபூர்ண ப்ரம்மாநந்த
...ங்களையும் ...

ஷித்து, எக்காலத்திலும் உயிர்களைப் பாதுகாத்து வருகிறதென்கிற விஷயம் எல்லோர்க்கும் தெரிந்ததே. அத்தகைய வேதத்திலுள்ள அர்த்த ஸம்சயங்களைத் தீர்ப்பதற்கு உரித்தாயுள்ளவை அதற்கு உபப்ருஹ்மண ரூபமாக இருக்கிற இதிஹாஸம் புராணம் இவ்விரண்டேதான். அவற்றுள் சிறப்பு வாய்ந்திருப்பதால் புராணத்தைவிட இதிஹாஸமே முக்யமான வேதோப ப்ருஹ்மணமாக அபிஜ்ஞர்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களையும், புராதனர்களான புண்ய புருஷர்களுடைய திவ்ய சரித்ரங்களையும், புண்யக்கதைகளையும் ஸவிஸ்தாரமாக எது எடுத்து உரைக்குமோ அதுதான் இதிஹாஸமென்று வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட இதிஹாஸங்களுக்குள் ப்ரஸித்தமானவை ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீ மஹாபாரதம் இவ்விரண்டேயாம். இவ்விரண்டினுள் ஸ்ரீமத் ராமாயணம் சிறியது; பாரதமோவெனில், லக்ஷத்து இருபத்தையாயிரம் ச்லோகங்களுடன் கூடி இருப்பதுடன், அர்த்த கௌரவமுள்ளதாக இருப்பதாலும் மிகப் பெரியது. சப்தார்த்தங்களுடைய கௌரவத்தாலும் தர்ம ப்ரவசநங்களாலும் நீதிகளாலும் நிறைந்திருப்பது பற்றி மஹாபாரதமென மஹத் சப்தத்தால் விசேஷிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இது வேதம்போல் எல்லா புருஷார்த்த ஸாதநங்களையும் துலக்கிக் காட்டுவதுடன், நிச்ரேயஸ ஸாதநங்களான நிவ்ருத்தி தர்மங்களையும் ப்ரதிபாதிப்பதால் ஐந்தாவது வேதமெனப்படுகிறது. இது ஸ்ரீ வியாஸ மஹர்ஷியினால் பரம க்ருபையுடன் உலகம் உய்யுமாறு நன்கு அநுக்ரஹிக்கப்பட்டிருப்பதால் கார்ஷ்ண வேதமென்று வழங்கப்படுகிறது. வேதவியாஸருக்கு க்ருஷ்ணர் என்று நாமதேயமுண்டு. இத்தகைய மகிமை வாய்ந்த மஹா பாரதத்தி லடங்கி யிருக்கிற பீஷ்ம பர்வத்தில் இருபத்தைந்தாவது அத்யாயம் தொடங்கி நாற்பத்திரண்டாவது அத்யாயம் வரையிலுள்ள பதினெட்டு அத்யாயங்கள் பகவத் கீதாத்யாயங்கள். பதினெட்டு பர்வங்களுக்குள் ஒன்றாகிய பீஷ்ம பர்வத்தி லடங்கி யிருக்கிற இந்தப் பகவத் கீதை ஒன்றே ஸாரதமமானது. பக்தாக்ரகண்யனை அர்ஜுனனை வ்யாஜமாகக் கொண்டு ஜகதுஜ்ஜீவனார்த்தமாகப் பகவானை ஸ்ரீ கண்ணபிரானால் உபதேசிக்கப்பட்டிருப்பதால் இதற்குப் பகவத்கீதை என்று பெயர் ஏற்பட்டது. உபநிஷத் ஸமாதி ஸித்தமான வ்யவஹார நிரூடியினால் கீதா சப்தம் ஸ்த்ரீ லிங்கத்தினால் நிர்தேசிக்கப்பட்டிருக்கிறது. தத்வ ஹிதங்களை உள்ளபடி உரைத்து, எல்லோரையும் நல்வழியில் நடைபெறச் செய்து, ஐஹிகாமுஷ்மிக லாபங்களை அடையும்படி பிராணிவர்க்கங்களை உத்தேசித்து ஆஜ்ஞையிடுவதால் இந்தக் கீதையானது [illegible] புகரப்படுகிறது. சாஸநம்

செய்வதால் இது சாஸ்த்ரம். தத்வ ஹிதங்களை உரைத்து ப்ராணிகளை பரம புருஷார்த்த லாபத்தை அடையத்தகுந்த வழியில் நடத்துவதில் முக்யமான கருத்துள்ளதாக இருப்பதால் இந்தக் கீதாசாஸ்த்ரம் மற்ற எல்லா சாஸ்த்ரங்களையும் விட மேன்மை வாய்ந்துள்ளது. இதன்பெருமை மஹாபாரதத்தில் மஹர்ஷியினாலேயே உரைக்கப்பட்டிருக்கிறது. “[illegible]திஷ்டம் வாங்மயம் க்ருஷ்ணத்வைபாயநோ முநி:” என்று அபியுக்தர்களும் கூறியிருக்கின்றனர். “பஹூநி வ்யாஸாத் ஸாரம் சைவ [illegible] ஶாஸ்த்ராணி [illegible] க்ருஷ்ணேந [illegible] ஸ்வயமேவ கீதம் ஶாஸ்த்ரஸ்ய தத்த்வார்த்தரஸம் கிமேவாஸ்தி ஶாஸ்த்ரம்” என்று ஐந்தாவது வேதமாகிய மஹாபாரதத்தில் இந்தக் கீதா சாஸ்த்ரத்திற்கே ப்ராதாந்யத்தை மஹரீயர்கள் கூறுகின்றனர். ‘பாரதே பகவத்கீதா தர்மஶாஸ்த்ரேஷு மாநவம் । வேதேஷு பௌருஷம் ஸூக்தம் புராணேஷு ச வைஷ்ணவம் ॥’ என்று மஹா பாரதத்திலுள்ள பீஷ்ம பர்வத்தில் நாற்பத்து மூன்றாவது அத்யாயத்தில் இந்தக் கீதையின் பெருமையைப் பற்றி மஹரிஷியே வ்யக்தமாகக் கூறி இருக்கிறார். அதாவது ‘கீதா ஸுகீதா கர்தவ்யா கிமந்யை: ஶாஸ்த்ரவிஸ்தரை: । யா ஸ்வயம் பத்மநாபஸ்ய முகபத்மாத் விநி:ஸ்ருதா । ஸர்வஶாஸ்த்ரமயீ கீதா ஸர்வதேவமயோ ஹரி: । ஸர்வதீர்த்தமயீ கங்கா ஸர்வவேதமயோ மநு: । கீதா கங்கா ச காயத்ரீ கோவிந்தேதி ஹ்ருதி ஸ்திதே । சதுர்ககாரஸம்யுக்தே புநர்ஜந்ம ந வித்யதே । ஷட்ஶதாநி ஸவிம்ஶாநி ஶ்லோகாநாம் ப்ராஹ கேஶவ: । அர்ஜுந: ஸப்தபஞ்சாஶத் ஸப்தஷஷ்டிம் து ஸஞ்ஜய: । த்ருதராஷ்ட்ர: ஶ்லோகமேகம் கீதாயா மாநமுச்யதே । ஸாரமுத்த்ருத்ய க்ருஷ்ணேந அர்ஜுநஸ்ய முகே ஹுதம் ।’

இவற்றின் பொருள்:—கீதா சாஸ்த்ரம் ஒன்றே நன்றாகக் கற்கத்தக்கது. கூட்டம் கூட்டமாக இருக்கிற மற்ற சாஸ்த்ரங்களால் யாது பயன்? இந்தக் கீதையானது பத்மநாபனை ஸ்ரீ கண்ணனுடைய முகாரவிந்தத்தினின்று மது தாரைபோல் தானாகப் பெருகிவந்தது. ஹரியானவர் எவ்வாறு ஸர்வ தேவதா ஸ்வரூபியோ, கங்கையானது எவ்வாறு ஸர்வ தீர்த்த ஸ்வரூபிணியோ, காயத்ரீ மந்த்ரம் எவ்வாறு ஸர்வ வேதமயமோ அவ்வாறே இந்தக் கீதையானது ஸர்வசாஸ்த்ர ஸ்வரூபிணியாய் விளங்குகிறது. கீதை கங்கை காயத்ரீ கோவிந்தன் என்று ‘க’காரத்தில் தொடங்கப்பட்டிருக்கிற இந்த நான்கு பதங்கள் எவன் உள்ளத்தில் குடிகொண் டிருக்குமோ அவனுக்கு மறுபடி ஸம்ஸாரபந்தம் கிடையாது. இந்தக் கீதாசாஸ்த்ரத்

தில் ஸ்ரீகேசவன் அறுநூற்று இருபது சுலோகங்களை அருளிச்செய்தார். அர்ஜுநன் ஐம்பத்தேழு சுலோகங்களையும் ஸஞ்ஜயர் அறுபத்தேழு சுலோகங்களையும் த்ருதராஷ்டரர் ஒரு சுலோகத்தையும் பகன்றனர். ஸ்ரீ கண்ணபிரான் பாரதமாகிற ஸமுத்ரத்தைத் தன் புத்தியாகிற மந்தர கிரியினால் கடைந்து, கீதையாகிற அம்ருதத்தை எடுத்து, அர்ஜுநனுடைய காதுகளாகிற அஞ்ஜலியினால் பருகச்செய்தார் என்று. இது பதினெட்டு அத்யாயங்களுள்ளது. ஆறு ஆறு அத்யாயங்களடங்கிய ஒரு க்ரந்த ஸந்தர்ப்பத்தை ஒரு ஷட்கமாகப் பகுத்து இந்த க்ரந்தம் முழுமையுமே மூன்று ஷட்கமாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாத்யன் ஸ்ரீமந் நாராயணன் என்பதை 'ஸ்வதர்ம ஜ்ஞானவைராக்ய ஸாத்ய பக்த்யேக கோசர: । நாராயண: பரம் ப்ரஹ்ம கீதா சாஸ்த்ரே ஸமீரித: ।' என்கிற சுலோகத்தால் ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தார். இதன் பொருள்:—தத்தம் வர்ணாச்ரமங்களுக்கு உரித்தாக இருக்கிற தர்மங்கள் ஸ்வதர்மங்களாகும். பரசேஷதைகரஸனாக இருக்கிற ஜீவாத்மாவை உள்ளபடி அறிதல் ஜ்ஞாநம்; பரமாத்மாவைத் தவிர்த்த மற்ற வஸ்துக்களில் பற்று தலற்றிருத்தல் வைராக்யம். இந்த ஸ்வதர்மங்களாலும் ஜ்ஞாநத்தாலும் வைராக்யத்தாலும் ஸாத்யமான பக்தி ஒன்றுக்கே கோசரனான பரப்ரஹ்ம ஸ்வரூபியான ஸ்ரீமந் நாராயணன் கீதா சாஸ்த்ரத்தில் நன்கு ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறார். வைராக்யமானது கர்மயோகத்துக்குப் பரிகரமாக இருப்பதால் கர்மயோக பர்யாயமாக இருக்கிற ஸ்வகர்மத்தினாலேயே இந்த வைராக்யமும் சொல்லப்பட்டு விட்டபடியால் மீண்டும் தனித்து வைராக்யத்தை எடுத்தது, 'வைராக்யம் உண்டானால் மோக்ஷமுண்டு, அதில்லாவிடில் மோக்ஷம் இல்லை' என்றிருப்பதுபற்றி மோக்ஷ விஷயத்தில் இதற்கு ப்ராதாந்யத்தை ஜ்ஞாபிப்பதற்காக.. இந்தக் கீதா சாஸ்த்ரம் முழுவதும் பக்தியை ப்ரதிபாதிக்கிறது. கர்மயோக ஜ்ஞாநயோகங்கள் இதற்கு அங்கங்களாதலால் அவைகளும் அப்ரதாநங்களாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அர்த்தத்தை 'பக்த்யேககோசர:' என்கிற பதத்திலுள்ள 'ஏக' சப்தத்தால் ஆசார்யர்கள் வெளியிட்டார்கள். யோகத்தை உத்தேச்யமாகக்கொண்ட கர்மயோகாநுஷ்டாநத்தினால் பாபங்கள் நாசமடைந்து சித்த சுத்தி ஏற்பட்டு ஜ்ஞாநயோகத்தை நாடி, யோக முகத்தால் ப்ரத்யகாத்ம ஸாக்ஷாத்கார ஸித்தி வந்தவனுக்குப் பக்தி யோகத்தி லதிகாரம் என்பதை ப்ரதமஷட்கத்தால் ஸ்ரீபகவான் வெளியிட்டார். மத்யம ஷட்கத்தினால் ஸகல ஜகதேக காரணமாயும் தோஷகந்த மற்றதாயும் கல்யாண குணங்களுக்கு ஆதாரமாயுமிருக்கிற பகவானாகிற ப்ராமாணிக பதார்த்தத்தினுடைய யதார்த்த ரூபாநுபவ ஸித்தியின்பொருட்டு ஜ்ஞாநயோகத்தாலும் கர்மயோகத்தாலும் ஸாதிக்கத்தக்க பக்தியோகத்தின் ஸ்வரூபம் நிரூபிக்கப்பட்

டது. மூன்றாவது ஷட்கத்தினால் காரணாவஸ்தமான அசித் த்ரவ்யம், அசித்துடன் சேர்ந்திருக்கும் நிலைமையுடையவனும் அசித்துடன் சேராமல் சுத்தாவஸ்தையுடன் கூடியவனுமான புருஷன், மஹத் தத்வம் முதலிய கார்யஜாதம், ஸர்வேசுவரன், இந்தப் பதார்த்தங்களைத் தனித்தனியே பகுத்தறிவதற்கு ஸாதநமாக இருக்கிற தர்மம், கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் முதலியவைகள் நிரூபிக்கப்பட்டன. இந்த விஷயங்கள் ஏற்கெனவே முந்தி கூறப்பட்டிருந்தபோதிலும், இங்கு தெளிவாக அவைகளின் ஸ்வரூபங்களை ஸவிஸ்தாரமாக சோதிப்பதற்காக மறுபடியும் இந்த ஸந்தர்ப்பத்தில் அவைகள் எடுத்துக் கூறப்பட்டன.

இந்தக் கீதையில் பரமபுருஷனான கண்ணபிரானால் தம்மிடத்திலுள்ள பரத்வம் ஸௌலப்யம் ஸௌசீல்யம் வாத்ஸல்யம் காருண்யம் ஆச்ரித ரக்ஷணம் பக்த பராதீநத்வம் முதலிய உத்தம குணங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஸதாசார்யன் ஸச்சிஷ்யனுக்கு உபதேசிக்க வேண்டிய முறையையும் ஸமயத்தையும் ஸ்ரீகண்ணபிரான் தமது சிஷ்யனாகிய அர்ஜுநனுக்குத் தாமே உபதேசம் செய்திருக்கிற முறையினால் நன்கு வெளியிட்டார். நாஸ்திகர்களும் ஆஸ்திகர்களும் விப்ரதிபத்தி யின்றி அங்கீகரித்து அநுஷ்டித்து உய்ய வேண்டிய விஷயங்கள் இந்தக் கீதையில் பற்பல உள. இதில் இரண்டாவது அத்யாயம் பன்னிரண்டாவது சுலோகமாகிய 'நத்வேவாஹம் ஜாது நாஸம்' என்கிற சுலோகம் துடங்கி 'அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:' என்கிற சுலோகம் வரையில் முற்றிலும் தத்வோபதேச ப்ரகரணம். அஸ்தாநத்தி லுண்டான ஸ்நேஹத்தாலும் காருண்யத்தாலும் நிலைதப்பி இருப்பவனும், க்ஷத்ரியர்களுக்கு யுத்தமானது பரம தர்மமாக இருந்தபோதிலும் அதர்மமென்று எண்ணி, தர்மத்தை அறியவேண்டு மென்கிற எண்ணத்தாலே சரணாகதனாகவு மிருக்கிற பார்த்தனைக் குறித்து ஆத்மாக்களுடைய யாதாத்ம்ய ஜ்ஞாநமும் பலத்தில் பற்றுதலின்றிச் செய்யப்படும் யுத்தமானது ஆத்ம ப்ராப்திக்கு உபாயமாகிறது என்கிற ஜ்ஞாநமும் இல்லாவிடில் இவனுக்கு மோஹம் தணியாதென்று எண்ணி, பரமபுருஷனால் அத்யாத்ம சாஸ்த்ரம் உபந்யஸிக்கப் பட்டது. ஜீவாத்மாக்கள் அனைத்தும் ஒன்றென்றும், அவைகள் அநித்யங்களென்றும், பரமாத்ம சைதந்யத்தைக் காட்டிலும் ஜீவ சைதந்யம் வேறுபட்டதல்லவென்றும், ஜந்மாந்தரமில்லை என்றும் சொல்லுகிற பற்பல மதங்கள் அநுபபந்நங்கள் என்பதை 'நத்வேவாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா: । ந சைவ நபவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ।' என்னும் தத்வஸாரஸங்க்ரஹ சுலோகத்தால் பரம புருஷன் தொடக்கத்தில் வெளியிட்டான். ஸ்வதர்மம் எல்லோருக்கும் அவசியம் அநுஷ்டிக்கத் தக்கதென்றும், அநுஷ்டாந காலத்தில் நேரக்கூடிய சிற்சில ஆயாஸங்கள் அவசியம் ஸஹிக்கத்தக்கவை என்றும், ஸ்வதர்மாநுஷ்டாநம் தேசகாலவைகுண்யத்தால் நன்கு

அநுஷ்டிக்கப்படாமல் போனபோதிலுங்கூட நிச்ரேயஸ ஸாதநமாகுமென்றும் யதார்த்தமானது ஸுலபமாக அநுஷ்டிக்கத் தக்கதாக இருந்தபோதிலும் கூட அது விலக்கத்தக்கதென்றும் அநுஷ்டித்தால் அது தீமையையே பயக்குமென்றும் பரமபுருஷன் கர்ம யோகோபதேச ப்ரகரணத்தில் உபதேசித்தான். நித்ய நைமித்திக காம்ய கர்மங்களுக்குள் ஆத்ம யாதாத்ம்ய நிச்சயத்தை முன்னிட்டு பலஸங்க கர்த்ருத்வங்களை விட்டு அநுஷ்டிக்கப்படும் நித்ய நைமித்திக கர்மாக்களே அபவர்க்க ஸாதநங்களாவதால் சிறந்தவைகளென்றும் தேஹத்தைக் காட்டிலும் வேறாக ஆத்மா ஒன்று உண்டென்கிற ஜ்ஞாநத்தை மாத்ரம் முன்னிட்டுப் பல ஸங்காதிகளை த்யஜிக்காமல் செய்யும் காம்ய கர்மாக்கள் பந்தகங்களாகின்றனவென்றும் ரஹஸ்யங்களை இரண்டாவது அத்யாயத்தில் 'நாற்பத்தோராவது சுலோகத்தில் பரம க்ருபாநிதியான ஸ்ரீகண்ணபிரான் அநுக்ரஹித்திருக்கிறார். ஸாரதமமான அம்சத்தை க்ரஹிப்பது ஸாத்விக ப்ரக்ருதிகளுக்கு உரித்ததாதலால், அதிகாரி பேதத்தை இலக்காகக் கொண்டு சுருதியில் காட்டப்பட்டிருக்கும் பற்பல வழிகளுக்குள் முமுக்ஷுவாக இருக்கிற உத்தமாதிகாரிக்கு க்ராஹ்யமான அம்சம் பரிமிதமாக இருக்குமென்கிற தத்வத்தையும் ஈசுவரன் அநுக்ரஹித்திருக்கிறான். ஜ்ஞாந யோகாதிகாரிக்குங் கூட ஆத்ம தர்சந விஷயத்தில் கர்மயோகமே சிறந்ததென்கிற தத்வத்தை ஜநகாதிகளை நிதர்சநமாகக் காட்டிப் பரமபுருஷன் வெளியிட்டான். ஸர்வேசுவரனாகவும் ஸர்வபூதாந்தராத்மாவாகவுமிருக்கிற பரமாத்மாவினிடத்தில் எல்லாக் கர்மாக்களையும் ஆத்மஸ்வரூப விஷயமான ஜ்ஞாநத்தால் வைத்து அந்தக் கர்ம பலங்களில் ஆசையற்றவனாகவும் 'என்னுடையது' என்கிற அபிமாநமாகிற மமதையில்லாதவனாகவும் கர்மாக்களை மனிதன் செய்யக்கடவனென்றும், இவ்வாறு பகவதாராதநரூபமாக கர்மாக்களைச் சிரத்தையுடன் அநுஷ்டிப்பது தான் தனக்கு மிக்க ப்ரீதியை உண்டு பண்ணுகிறதென்றும், அவர்கள் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறார்களென்றும், சிரத்தை இல்லாவிடினும் என்னை உத்தேசித்துச் செய்யப்படும் கர்மங்களில் எவர்கள் அஸூயை படுகிறார்களில்லையோ அவர்களும் பாபத்தினின்று விடுபடுகிறார்களென்றும் இப்படிச் செய்வதுதான் தன் மதமென்றும் பரமபுருஷன் "யே மே மதமிதம் நித்யம் அநுதிஷ்டந்தி மாநவா: । ச்ரத்தாவந்தோऽநஸூயந்தோ முச்யந்தே தேऽபி கர்மபி:" என்கிற ச்லோகத்தால் ஸ்பஷ்டமாக வெளியிட்டிருக்கிறான்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே வேங்கடநாதாய வேதாந்தகுரவே நம:

"அடியவர்க்கு மெய்யனிடம் ஸ்வாமி தேசிகனின் ஈடுபாடு."

(விழுப்புரம் தாலுகா ஆரியூர். வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்.)

மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்கள் பதின்மரால் மங்களாசாஸநம் செய்யப்பட்ட நூற்றெட்டுத் திவ்ய தேசங்களுள், திருவஹீந்த்ரபுரம் எழுபத்திரண்டாவது திருப்பதியாக விளங்குவது; 'நாலு கவிப் பெருமாள்' எனும் திருமங்கையாழ்வாரின் மங்களாசாஸநம் பெற்றுத் திகழ்வது. "சேஷஸ்ய ஸஹ தஜ்ஜ விஹகராஜ விரிஞ்சபூஜ்ய:" என்றபடி திருவனந்தாழ்வானாலும் பூமிப் பிராட்டியாராலும் பெரிய திருவடியாலும் நான்முகனாலும் ஸேவிக்கப் பட்டதாயும், 'பன்மா மாயப்பிறவியிற் படிந்து' ஸம்ஸார ஸாகரத்திலாழ்ந்து வாழ்நாட்களை வீணே கழித்துத் துன்பமடையும் சேஷபூதர்களைத் தனது பரம க்ருபையினாலே உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம்பற்றி 'அயிந்தைமா நகரில் அமர்ந்தனை மெய்க்காய்' என்னலாம்படி எழுந்தருளியிருக்கும் 'அடியவர்க்கு மெய்யன்' உகந்தருளியதாயுமுள்ள பெருஞ் சிறப்புடையது.

"கலியுகத்தில் எல்லோரும் கொண்டாடத் தகுந்த ஒப்பற்ற ஞான முள்ளவராய், ஹரியினுடைய திருமணியின் அம்சமான முனிவர் ஒருவர், இந்தப் பர்வதத்தில் (ஔஷத கிரியில்) தவஞ் செய்து ஸித்தியடையப் போகின்றார்*" என்று, ப்ரும்மாண்ட புராணத்தில், அஹீந்த்ரபுர மாஹாத்ம்யத்தில் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறபடியே "அன்றிவ் வுலகினை யாக்கி யரும்பொருள் நூல் விரித்து, நின்றதன் னீள்புகழ் வேங்கட மாமலை மேவிப் பின்னும், வென்றி புகழ்த் திருவேங்கட நாதனெனுங் குருவாய், நின்று நிகழ்ந்து மண்மேனின்ற நோய்கள் தவிர்ப்ப" தற்காக, ஆசார்யர்களுக்குள் ச்ரேஷ்டதமராய், ஆசார்ய சப்தத்திற்கு முக்கியார்த்தமான 'ஸ்ரீ தேசிகன்' எனும்

* கலௌ வ்ருஷ்ணி ஸமாக்யாதோ கீர்த்திமாம்ஸ்து ஹரேர்மணி: ।
தபஸ்தப்த்வா கிராவத்ர ஸித்திம் ப்ராப்ஸ்யதி ஸத்தம: ॥

அஸாதாரணமான திருநாமத்துடன், ஹிமவநம் என்னும் திருத்தண்காவில் அவதரித்தருளிய நிகமாந்த குருவின் பெருமையை முற்றும் யாம் எடுத்துரைக்க முயல்வது 'ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு பூசை முற்றவும் நக்க'ப் புகுவதை ஒக்கும்.

அத்தகைய அஸாதாரண ச்ரேயஸ்ஸை யுடைய ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்திற்கு மிகவும் உகப்பானதும், பெரிய திருவடி நயினாரையும் ஸ்ரீஹயக்ரீவரையும் ப்ரத்யக்ஷீகரித்த திவ்ய ஸ்தலமும், பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை வளர்த்துக்கொண்டு தமது சிஷ்ய வர்க்கங்களுடன் முப்பது ஸம்வத்ஸரங்கள்போல் எழுந்தருளியிருந்ததும் திருவஹீந்திரபுரமேயாம். இந்தத் திவ்ய தேசத்தில் ஸ்வாமி தேசிகன் கொண்டிருந்த ப்ரீதி விசேஷத்தைத் திருவஹீந்திரபுரத்தில் இன்றும் விளங்கிவரும் அவரது திருமாளிகையும், அவர் திருக்கரத்தினாலேயே கட்டப்பட்ட திருக்கிணறும் ஸூசிப்பித்து நிற்கின்றன. மேலும், திருவேங்கடமுடையானது அவதாரமான ஸ்ரீதேசிகன், மற்றெந்த திவ்ய தேசத்தைக்காட்டிலும் அதிகமானதும் அஸாதாரணமானதுமான ப்ரீதியோடு அயிந்தைமா நகரில் அர்ச்சாவதாரத் திருமேனியோடு ஸாந்நித்யம் செய்திருப்பதனா லல்லவோ, திருமலைக்குப் போவதாக ப்ரார்த்தனை செய்துகொண்டு அசக்தியினால் அங்குப் போகமுடியாத ஜனங்கள், ஸ்ரீ வெங்கடாசலபதி போலவே ஸேவை ஸாதித்துக்கொண்டு அடியவர்க்கு மெய்யனாகி விளங்கும் தேவநாதன் ஸந்நிதியடைந்து ப்ரார்த்தனையை நிறைவேற்றி இஷ்டகாம்யங்களை நாளதுவரை எளிதில் பெற்று வருகின்றார்கள்! அம்மட்டோ! ஸ்வாமி தேசிகன் வெகுகாலம் தவஞ்செய்து ஸ்ரீ ஹயக்ரீவரால் அநுக்ரஹிக்கப்பட்டு முதன்முதலாக எம்பெருமானை மங்களாசாஸனம் செய்யத் தொடங்கியதும் திருவஹீந்த்ரபுரமே யன்றோ? சில்பி ஒருவனை ஜயித்தருளிய காலத்தில் ஸ்வாமி தேசிகனாலேயே செய்யப்பட்ட தமது அர்ச்சா விக்ரஹத்தை, தமது விசேஷ அபிமானம் பெற்ற அயிந்தை நகரிலேயே ப்ரதிஷ்டை செய்தருளினார், நமது தேசிகனென்று நம் பெரியோர்கள் அநுஸந்தித்துப் போருவார்கள். அக்காலத்தில், திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்வாமி தேசிகனுக்கு இருந்த ப்ரீதி விசேஷத்திற் கிணங்க, நாளது வரை ப்ரதி ஸம்வத்ஸரத்திலும் மேற் குறிப்பிட்ட அர்ச்சாவதாரத் திருமேனியோடுள்ள ஸ்ரீ தேசிகன், மற்றெல்லா விடங்களைவிட அயிந்தை நகரிலேயே அதிவிபவமான திவ்யோத்ஸவம் கண்டருளி வருவதொன்றே எமது கூற்றை வலியுறுத்தும். ஸ்ரீஹயக்ரீவரால் அநுக்ரஹிக்கப்பட்ட திவ்ய ஜ்ஞாந பூர்ணராய், அஸாதாரண தேஜஸ்ஸுடன் கூடிய திருமுகத்துடன் ஔஷத கிரியினின்றும் அக்காலத்தில் கீழ் இறங்கிய ஸ்வாமி தேசிகனது அவ்வற்புத ஸேவையை நாளைவரை பிரதி புரட்டாசித் திருவோணத்திலும் திருவஹீந்த்ரபுரத்தில் ஸேவிக்கலாமே!

ஸ்ரீ தேசிகனின் வாழித் திருநாமத்தில், மற்ற ஆழ்வார்களுள் எவரையும் குறிப்பிடாமல் குமுதவல்லி மணவாளரே நமது ஸ்வாமிக்கு அத்யந்த உத்தேசியமானவ ரென்று நமது பூர்வாசார்யர்கள் அருளிச்செய்திருக்கிறார்கள். "கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே" என்பதால், ஆழ்வார்க ளனைவரையும் தமது அவயவங்களாகக் கொண்ட நம்மாழ்வாருக்குக் கலியன் மிகவும் அந்தரங்க பக்தராக இருந்து வந்தமையாலும், சடகோபரது திருவாய்மொழி முதலிய நான்கு ப்ரபந்தங்களையும் சதுர்வேத ஸாம்யமாகச் செய்து, தமது ப்ரபந்தங்களை அவற்றின் ஆறு அங்கங்களாக அமைத்தமையாலும், திருமங்கைமன்னன் நமது ஸ்வாமிக்கு மிக உத்தேச்யரானார். இதை விளக்க ஒருதாரணம் காட்டுதும்:—

"வையமேழு முண்ட ாலிலைவைகிய மாயவன் அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகனிடம்" என்று நமது கலியன் திருவயிந்திரபுரத்தை மங்களாசாஸனம் செய்தருளினார். கலியனுரை குடிகொண்ட கருத்துடைய நமது ஸ்வாமியும் அவ்வாறே, 'அவனிமருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே' என்றும், 'அருள்கொடுத்து வினைதவிர்க்கும் அடியவர்க்கு மெய்யனே' என்றும் தெய்வநாயகனை மங்களாசாஸனம் செய்துள்ளார். அடியவர்க்கு மெய்யன், அச்சுதன் என்னும் திருநாமங்கள் அயிந்தைநகர் அமர்ந்த தெய்வநாயகனுக்கே சிறப்பாக உரிய திருநாமங்களாகத் திகழ்கின்றன.

ஸ்வாமி தேசிகன் மற்றைத் திவ்யதேசத் தெம்பெருமான்கள் விஷயமாக அருளிச்செய்திருக்கும் ஸ்தோத்ராதிகட்கும், அடியவர்க்கு மெய்யன் விஷயமாக அருளிச்செய்திருக்கும் ஸ்தோத்ராதிகட்கும் மிகப்பல வேற்றுமைக ளிருக்கின்றன. மற்ற திவ்யதேசத் தெம்பெருமான்களைப் பற்றிய மங்களாசாஸநங்களில் எம்பெருமானுக்குப் பொதுவான குணவிசேஷங்களையே குறிப்பிட் டருளியுள்ளார்; அடியவர்க்கு மெய்யனைப்பற்றிய மங்களாசாஸநங்களிலோ வென்றால் அவ்வாறு பொதுவாக மதிக்கத்தக்கனவா யில்லை. "[illegible]" [ஒவ்வொரு அங்கத்திலும் நிறைந்திருக்கிற காந்தியாலே மநோஜ்ஞமாய் உள்ளதான உம்முடைய சரீரத்தை எனது கண் பார்த்துப் பார்த்து த்ருப்தியடையவேயில்லை] என்று தெய்வநாயகனை நோக்கி நமது ஸ்வாமி ஓரிடத்தில் விண்ணப்பிக்கின்றார். "தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன, தாள்கண்டார் தாளே கண்டார்! தடக்கைகண் டாருமஃதே" என்று கம்பர் பாடியவாறு, அடியவர்க்கு மெய்யனது அவயவங்களுள் ஏதேனும் ஒன்றை உற்று நோக்கிய நமது ஸ்வாமி தேசிகனின் நயனங்கள் அதன் வடிவழகி

லேயே ஈடுபட்டு, தேன் நிறைந்த மலரில் இழிந்த வண்டுகளேபோலப் பிற வற்றை மறந்து அதிலேயே லயித்துவிடுகின்றன. ஆகவே, அடியவர்க்கு மெய்யனது திவ்யாவயவங்கள் ஒவ்வொன்றும் எல்லையில்லாத அழகு வாய்ந் தனவா யிருத்தலின், ஸ்ரீ தேசிகனின் அநுபவத்திலும் ஒவ்வொன்றின் அழகும் முடிவற்றதாகவே ஆய்விடுகின்றது. இந்நிலையில் அவ்வானந்தானு பவத்தில் த்ருப்திக் கிடமேது?

தெய்வநாயகனது திருக்கரங்களில் திகழும் சங்க சக்ரங்களை வரு ணிக்க வந்தவிடத்தில் ஸ்ரீதேசிகன்,

> " நீலா சலோதித நிஶாகர பாஸ்கராபே
> ஶார்ங்காஹிதே ஶரணவதே தவ ஶங்க சக்ரே |
> வாமேதர ஸ்தஸ்ய ஜகதா ஸஹ ப்ராவஹந்தி
> ப்ராப்தாபயம் ஜகதி ஸாவயதஸ் ஸஹஸ்தம் ||"

[ஹே ! தெய்வநாயகனே! இந்திர நீல மலையில் உதித்த சந்திரனையும் சூரியனையும் போன்ற காந்தியுடையவைகளும், விரோதிகளை அழிப்பவை களுமான தேவரீருடைய திருச்சங்கும் திருவாழியும் சரணமடைந்தவர் கட்கு அபய மளிக்கிற இந்த வலத் திருக்கரத்தினுடைய உறுதிமொழியை (அபயப்ரதாநத்தில்) உலகில் தன் பகைவரைக் கொல்லும் தன்மையினால் சொல்லுகின்றன போலும் காட்டுகின்றன] என்று அருளிச் செய்கிறார். எம் பெருமானது திருமேனியை இந்திர நீல மலையாகவும், சங்க சக்ரங்களைச் சந் திர சூர்யர்களாகவும் வர்ணித்திருப்பது பரமானந்தத்தைத் தருவதா யிருக்கி றது. மாசற்ற தூய வெண்மை நிறமா யிருத்தலாலும், குளிர்ச்சி பொருந்தி விளங்குவதாலும், பக்தர்களது இருதயங்கட்குப் பரமானந்த மளிப்பதாலும் திருச் சங்கத்தைச் சந்திரனுக்கும், துஷ்டர்களைச் சிக்ஷிக்கும் வெம்மையினா லும், கண்கள் கூசும்படியான பிரகாசத்தை உடையதா யிருப்பதனாலும், உலகு முழுவதும் தனது அதிகாரத்தைச் செலுத்தி வருவதாலும், திருச்சக்ரத்தாழ் வானைச் சூர்யனுக்கும் ஒப்பிட்டு வர்ணித்திருப்பதைச் சிந்திக்குந் தோறும் மனம் ஆனந்தக்கட லாடுகிறது.

அடியவர்க்கு மெய்யனும் தெய்வநாயகனை ஸர்வ கல்யாணகுணங்களும் நிறைந்த உத்தம பர்த்தா வாகவும், தன்னை அவனிடம் மெய்க்காதல் கொண்ட காதலியாகவும் பாவித்து ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்திருப்பனவற்றுள் சிருங்கார ரஸம் நிறைந்து விளங்குகிறது.

> " ஸ்வாபாவிக வஸ்த்ரித பல்லவ பாரிஜாத
> ஶாகீரஜோஷி ப்ரஹாஸ்தத கதந்த நாத |
> வம்சேந ஶங்கவபிதோ நிஷேவிதம் தே
> பிம்பாதரம் ஸ்ப்ருஶதி ஸாமவதீ மதிர்மே ||"

[தெய்வநாயகனே! (தனது இயற்கையான) செம்மை நிறத்தால் தளிர்த்தது போலத் தோன்றுகிற இளமைப் பருவமாகிய பாரிஜாதம் போன் றதும், கோபிகைகளால் அனுபவிக்கப்பட்டதும், மூங்கிலா லாகிய குழலாலும் சங்கங்களுக் கெல்லாம் தலைமை பெற்று விளங்கும் பாஞ்சஜந்யத்தாலும் (முறையே கானம் செய்த காலத்திலும், சங்கத் துமானம் செய்த காலத்திலும்) நன்கு அடையப்பட்டதுமான தேவரீருடைய கோவைக் கனியை ஒத்த கீழ் உதட்டை மிக்க ஆசையோடு கூடியதான எனது புத்தியானது நன்றாய்த் தொடுகிறது] என்று, தேவநாயக பஞ்சாசத்தில் நமது ஸ்வாமி அருளிச் செய்திருக்கின்றார். 'ஸ்ப்ருஶதி ஸாமவதீ மதிர்மே' என்பதால் " வாலிய தோர் கனிகொல்? வினையாட்டியேன் வல்வினைகொல்? கோலந்திரள் பவளக் கொழுந் துண்டங்கொலோ? அறியேன்'' என்று ஆழ்வார் அனுபவித்தது போல நமது ஸ்வாமி தேசிகனும் நாயகி பாவத்தை அவலம்பித்துத் தெய்வ நாயகனது திருப்பவளச் செவ்வாயை அனுபவித்ததாகத் தெரிகிறது.

''ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்!'' என்று விச்வாமித் ரர் விளிக்க நின்ற சக்ரவர்த்தித் திருமகனை போல, அஸாதாரண ஸௌந்தர்ய விசேஷத்தையுடைய அடியவர்க்கு மெய்யனை ஸேவித்த ஸ்வாமி தேசிகன் நாயகி அவஸ்தையை அடைந்து, ப்ரேமை மிகுந்து நின்ற நிலையைத் தாயார் கூற்றாக,

> " ஆர்க்குங் கருணை பொழிவான் அயிந்தையில் வந்தமர்ந்த
> கார்க்கொண்டலைக் கண்ட காதற்புனமயில் கண்பனியா
> வேர்க்கு முகிழ்க்கும் விதிர்விதிர்க்கும் வெள்கி வெவ்வுயிர்க்கும்
> பார்க்கின்றவர்க்கிது நாமென் கொலென்று பயிலுவமே ''

என்று மும்மணிக்கோவையில் அமைந்திருக்கும் பாசுரம் கவனிக்கத் தக்கது உண்மையான நிலையை உணரச் சக்தியற்றவர்களால், 'இவளுக்கு என்ன நோய்?' என்று வினவநின்ற தலைவி, தலைவனாகிய தெய்வநாயகனைப் பிரிந்து தளர்வெய்திய காலத்திலும், வேறெவ்வித உபாயாந்தரங்களாலும் தனது துயரை விலக்கிக்கொள்ள விருப்பமின்றி அடியவர்க்கு மெய்யனையே தனது துயரை அகற்றவேண்டி, ''உன்னை லல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்'' என்ற ஆழ்வாரைப்போல

"இருளு மருளுந் தருமங்கா ளருளா ராழி சங்கேந்தி
அருளுந் தெருளுந் தாவென்பால் அடியோர்மெய்ய! வந்தருளனே"

என்றும்,

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

[தெய்வநாயகனே ! ஆத்மசௌர்யம் செய்வதில் த்ருப்தியுள்ளவனுன என்னுலேயே இப்பொழுது ஸமர்ப்பிக்கப்பட்டதாயும், மற்றவர்களாலே அணியத்தகாததாயும், உம்முடைய பொருளுமான என்னை அங்கீகரித்து, தன் திருவடியில், திருடனுல் ஸமர்ப்பிக்கப்பட்ட தன்னுடைய பாதச் சிலம்பைப்போல் தரித்துக்கொள்வதற்குத் தகுதியுடையவராகின்றீர்] என்றும் தெய்வநாயகனையே சரணமடைகிறார்.

"வெற்புடனென்றி யயிந்தையில் வெவ்வினைதீர் மருந்தொன்
றற்புதமாக வமர்ந்தமை கேட்டருள் வேண்டிநிற்க
பற்பின் மறந்த செய்யாள் படிகாட்டிய பண்புடையெம்
விற்புருவக் கொடிக்கோர் விலங்கா மயல் பெற்றனமே"

என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருப்பது ஆராயத்தக்கது. 'விலக்கா' என்பது 'விலங்கா' என்றுய், அதற்கு எம்பெருமானைத் தவிர மற்றெவராலும் விலக்கமுடியாத மயல் என்றும் பொருள்படும்.

"சேர்வன் சென்றென்னுடைத் தோழிமீர்கள்!
அன்னையர்காளென்னைத் தேற்றவேண்டா
நீர்களுரைக்கின்ற தென்னிதற்கு
நெஞ்சும் நிறையு மெனக்கிங்கில்லை"

என்று ஆழ்வார் அனுஸந்தித்தபடியே, தன்னைத் தேற்றித் தனது துயரை ஆற்ற முயலும் அன்னைமாராலும் தோழிகளாலும் நிவர்த்திக்க முடியாத தனது மயலையே 'விலங்கா மயல்' என்று அருளிச்செய்கிறார் போலும் !

"ஏழ்மைப் பிறப்புக்கும் சேம மிந்நோய்க்கு மீதே மருந்து
ஊழ்மையில் கண்ணபிரான் கழல் வாழ்த்துமி னுன்னித்தே"

என்றும்,

"வினையேன் வினைதீர் மருந்தானுப் விண்ணோர் தலைவா"

என்றும் ஆழ்வார் அருளிச்செய்தபடியே, ஸ்வாமி தேசிகனும் "வெற்புடனென்றியயிந்தையில் வெவ்வினைதீர் மருந்தொன், றற்புதமாக வமர்ந்தமை" கருதி "மருத்துவனுய் நின்ற மாமணிவண்ணனுய தெய்வநாயகனையே ப்ரார்த்தித்து நிற்கிறார் தனது மயலைத் தீர்க்குமாறு.

அடியவர்க்கு மெய்யனை ஒரு நாயகனுகவும், தம்மை ஒரு நாயகியாகவும் பாவித்து, அவனது வடிவழகை அனுபவித்தருளினர் என்கிற அர்த்தம்,

"[illegible]
[illegible]"

என்று ஸ்ரீ தேசிகனுலேயே, அச்யுத சதகத்தின் கடைசியில் அருளிச்செய்யப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. அக்ரந்தத்தின் மற்றோரிடத்தில், திருவைகுந்தத்தில் உண்டாக்கக்கூடிய இன்பமும், இந்த அடியவர்க்கு மெய்யனை அனுபவிப்பதில் தமக்கு உண்டாயிருந்ததனுல் அவனது வடிவழகிலேயே ஈடுபட்டு, நலமந்த மில்லதோர் நாடாகிய வீடு பெறுவதிலும், அடியவர்க்கு மெய்யனுடைய இந்த அனுபவமே வேண்டுமென்று ப்ரார்த்தித்து நிற்கிறுர்

"[illegible]
[illegible]"

என்பதால்.

இதுகாறும், சொல்லிவந்தவற்றுல் அடியவர்க்கு மெய்யனிடம், ஸ்வாமி தேசிகனின் ஈடுபாடு எத்தகைய அஸாதாரண விசேஷம் பொருந்தியதென்பது இனிது விளங்கும்.

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

தெய்வ நாயகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

கம்பர் ஸ்ரீவைஷ்ணவ சமயத்திற்குச் செய்தருளிய பேருதவிகள்.

[திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்.]

(தொடர்ச்சி—ஸம்புடம் 17, 326-ம் பக்கம்)

28. "மண்ணி னின்றுமேன் மலரய னுலகுற வாழும்
எண்ணில் பூதங்கள் நிற்பன திரிவன விவற்றின்
உண்ணி றைந்துறை காரணத்தி னாங்குள வுணர்வும்
எண்ணு கின்றதிவ் வெட்டெழுத் தேபிறி தில்லை."
உயுத்த காண். ஷை பட. செ. 43

29. "முக்கட் டேவனும் நான்முகத் தொருவனு முதலா
மக்கட் காறுமிம் மந்திர மறந்தவர் மறந்தார்
புக்குக் காட்டுவ தரிதிது பொதுவுறக் காண்பார்
ஒக்க நோக்குந ரல்லவ ரதனிலை யுணரார்."
ஷை காண். ஷை பட. செ. 44

30. "..
....
எல்லையில் பெருங்குணத் திராமன் தாளிணை
புல்லுதும் புல்லியிப் பிறவி போக்குதும்."
ஷை காண். வீடணன் அடைக்கலப்படலம் செ. 20.

31. "தேவாதிதேவர் பலராலுனாதி திருநாம மோது செயலால்
மூவாதுநாளு முலகேழோடேழு மரசாளுமேன்மை முதலா
மேவாதவின்ப மவைமேவிமேவி கெடுவீடுகண்டு முடிவார்
...."
ஷை காண். நாகபாசப்படலம் செ. 250

32. "பார்ப டைத்தவன் படைக்கொரு பூசனை படைத்தீர்
நீர்ப டக்கட வீரலிர் வரிசிலை நெடியோன்

பேர்ப டைத்தவ ரடியவ ரடியரும் பெறுவர்
வேர்ப டைத்தவெம் பிறவியாற் றுவக்கொணா வீடு"
ஷை காண். பிரமாத்திரப்படலம். செ. 183

33. "பகுதி யென்றுள தியாதினும் பழையது பயந்த
வகுதி யால்வந்த விளைவுமற் றதற்குமே னின்ற
புகுதி யாவர்க்கு மரியவப் புருடனு நீயிம்
மிகுதி யுன்பெரு மாயையி னால்வந்த விக்கம்."

34. "முன்பு பின்பிரு புடையெனுங் குணிப்பரு முறைமைத்
தம்பெ ருந்தன்மை தாந்தெரி மறைகளின் தலைகள்
மன்பெ ரும்பர மாற்பமென் றுரைக்கின்ற மாற்றம்
அன்பின் நின்னையல் லான்மற்றிங் கியாரையு மறையா."

35. "எனக்கு மெண்வகை யுருவற்கு மிமையவர்க் கிறைவன்
தனக்கும் பல்பெரு முனிவர்க்கு முயிருடன் தழீஇய
அனைத்தி னுக்குநீ யேபர மென்பதை யறிந்தார்
வினைத்து வக்குடை வீட்டருந் தளைநின்று மீள்வார்."

36. "ஐயஞ் சாகிய தத்துவந் தெரிந்தறிந் தவற்றின்
மெய்யெஞ் சாவகை மேனின்ற நினக்குமேல் யாதும்
பொய்யெஞ் சாவில தென்னுமி தருமறை புகலும்
வையஞ் சான்றினிச் சான்றுக்குஞ் சான்றிலை வழக்கால்."

37. "தோற்ற மென்பதொன் றனக்கிலை நின்கணே தோற்றும்
ஆற்றல் சால்முதற் பகுதிமற் றதனுளாம் பண்பால்
காற்றை முன்னுடைப் பூதங்க ளவைசென்று கடைக்கால்
வீற்று வீற்றுற்று வீவுறு நீயென்றும் விளியாய்."

38. "என்னு ருக்கொண்டிவ் வுலகினை யீனுதி யிடையே
உன்னு ருக்கொடு புகுந்துநின் றோம்புதி யுமையோன்
தன்னு ருக்கொடு துடைத்திமற் றிதுதனி யருக்கன்
முன்னு ருக்கொடு பகல்செயுந் தாத்தது முதலோய்."

39. "ஓங்கா ரப்பொருள் தேருவோர் தாமுனை யுணர்வோர்
ஓங்கா ரப்பொரு ளென்றுணர்ந் திருவினை யுகுப்போர்

ஓங்கா ரப்பொரு ளாமன்றென் றூழிசென் றூலும்
* ஓங்கா ரப்பொரு ளேபொரு ளென்கலா உரவோர்.''

உயுத்த காண். மீட்சிப்படலம். பிரமன் துதி செய்யுள்கள்:—
100, 101, 102, 104, 107, 109, 110.

40. "என்னு மாத்திரத் தேறமர் கடவுளு மிசைத்தான்
உன்னை நீயொன்று முணர்ந்திலை போலுமா லுரவோய்
முன்னை யாதியா மூர்த்திநீ மூவகை யுலகின்
அன்னை சீதையா மாதுநின் மார்பின்வந் தமைந்தாள்.''

41. "துறக்குந் தன்மைய ளல்லளாற் றொல்லையெவ் வுலகும்
பிறக்கும் பொன்வயிற் றன்னையிப் பெய்வளை பிழைக்கின்
இறக்கும் பல்லுயி ரிறைவநீ யிவள்திறத் திகழ்ச்சி
மறக்குந் தன்மைய தென்றனன் மழுவலான் வழுத்தி.''

ஷை காண். ஷை பட. சிவபிரான் துதி செய்யுள்கள்—113, 114.

இவ்விடங்களில் எல்லாம் கம்பர் விஷ்ணு பாரம்மியத்தை விளக்கமாகவும் அருமையாகவும் ஆழமாகவும் எடுத்துரைக்கின்றார். நமது வியாசம் மிக நீண்டுவிட்டதால் இவற்றின் ஆழ்பொருள்களை இப்போது கூற இயலாமைக்கு வருந்துகின்றோம். இனி எத்தனையோ இடங்களில் ஸ்ரீராமபிரானை, 'என்னையாளுடையவன்,' 'என்னை யாளுடை நாயகன்', 'எந்தை', 'என்னுயிர்த் தலைவன்', 'என்னை யாளப்பன்' என்றும், 'சுந்தரமூர்த்தி', 'தனி மூர்த்தி', 'முதற்பொருள்', 'முழுப்பொருள்', 'மெய்ம்மைப் பொருள்', 'பொருளுக்கும் பொருள்' என்றும், மனமார வாழ்த்தி, நெக்குருகிப் பக்திப் பெருங் கடலில் மூழ்குகின்றார்; ஸ்ரீராமன் தன்னுடைய சொந்த, உயர்ந்த, முழுத் தனிக்கடவுள் என்கிறார்; விஷ்ணுவே 'ஸ்ரீராமன்' என்று நன்றாக மொழிகின்றார்; ஆழ்வார்கள், அப்பனிடத்தில் ஆழங்காற்பட்டு ஈடுபடுவதைப்போல் மெய்ம் மறந்து பக்திச் சுவை ததும்பத் ததும்ப ஈடுபடுகின்றார். இதனை, விராதன், இந்திரன், கவந்தன், வாலி, சீதை, அநுமான், பிரகலாதன், கருடன், பிரமன், சிவன் முதலியோர் வாயிலாக வைத்துக் கூறுமாற்றைக் காண்க. இரா

* 'ஓங்கா ரப்பொருள் நீயென உணர்குவர் உணர்ந்தோர்' என்று ஓர் ஏட்டுப் பிரதியில் காணப்படுகிறது.

ணியன் வதைப் படலத்துப் பிரகலாதன் துதிகொண்டு கம்பர் ஈடுபட்டமை மஹாநந்தம் பொருந்தியதாய் மிளிர்கின்றது. வேதார்த்தங்களையும், இறை நிலையையும் மிக அழகாகவும் ஆழமாகவும் இப்படலத்திலே காட்டுகின்றார். கம்பரது செவ்விய புலமைத் திறமும், பக்தியும், வைஷ்ணவத்வமும் அறிதற்கு இந்த ஒரு படலமே போதும். இராமாயணம் முழுதுமே அழிந்தாலும், இந்த ஒரு படலம் மட்டில் இருந்தால் போதுமானது. இன்னுங் கம்பர், ஸ்ரீராமனுக்குத் 'தன்னலா தொருபொருள் தனக்கு மேலிலான்' என்றும், 'இதுவென் றெண்ண லாவதோர் மூல மில்லான்' என்றும், 'மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள்' என்றும் கொடுத்திருக்கும் அன்பு சுரக்கும் அரிய அடைமொழிப் பிரயோகங்கள் எவ்வளவு அழகியவாய் மிளிர்கின்றன பாருங்கள். ஏதோ இரண்டோர் இடங்களில் உபசாரமாக மேம்படுத்திக் கூறிய சிவன் முதலிய தேவர்களுக்கு, இத்துணைச் சிறந்த நூற்றுக் கணக்கான பிரயோகங்களைக் கம்பர் தம் நூலில் எங்கானும் பெய்திருக்கின்றாரா கவனியுங்கள். இல்லவே இல்லை.

ஆகவே, எத்தனையோ பெயர் எவ்வளவு தான் ஆராய்ச்சி செய்யினும், என்ன தான் சொல்லினும், கம்பர், ஸ்ரீவைஷ்ணவர் ஆகாமற் போகார் என்று கடைப்பிடிக்க. கம்பர் இங்ஙன மெல்லாம், தம் நூலின் இடையிடையே விஷ்ணு பாரம்மியத்தைக் கூறிச் சென்று, ஸ்ரீவைஷ்ணவ சமய வெற்றிக் கொடியை நாட்டி, நம்மனோர்க்குப் புதிய உணர்ச்சியைத் தந்து மகிழ்விக்கின்றார். கம்பர், பரதேவதையான ஸ்ரீராமபிரானே தமக்குப் பெருந் தெய்வம் என்று கொண்டு, அத்தேவதையை இடைவிடாமல் மனனம் செய்யும்படிக்கும், அவனது அனந்த திவ்விய குணங்களை அநுபவிக்கும்படிக்கும், அவ்விராமன் கபடநாடக சூத்திரதாரியாய் அமைந்து, ஆங்காங்கு ஒன்று மறியான்போல் கிடந்த வாற்றினைப் பார்த்துப் பார்த்துக் களித்துப் பெரியதோர் இன்பம் எய்தி ஆனந்தம் அடையும்படிக்கும், முத்து மாலையிலே மாணிக்கக் கற்கள் கோத்தால்போல் பாடிய பாடல்கள் பல. அவைதம்மை யெல்லாம் இங்கெடுத் துரைக்கப் போதிய இடம் இல்லை. கம்ப ராமாயணத்தைப் பல தடவையும் ஆழ்ந்து ஆழ்ந்து படித்துப் பயின்றால்தான், அவ்வுணர்ச்சியும் அதனால் உண்டாகும் சுவையும் பிறக்கும். இரண்டோர் இடங்களைக் குறிப்பிடுவதனால் மட்டில் ஆவ தொன்று மில்லை. ஒவ்வொருவரும், அவர் செய்திருக்கும் வேலைத் திறத்தை ஆழ்ந்து அறிந்தால்தான் அனைத்தும் தெரியவரும்.

ஸ்ரீ. வை. ஸி. ஸபை உபந்யாஸங்கள்.

(1) நெல்லூரில் ஆதரவு.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ப்ரவசநத்தை முன்னிட்டு நெல்லூரில் சென்ற அக்டோபர் 9, 10-ந் தேதிகளில் ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி ஸந்நிதியில் வித்வான் உ. வே. குடவாசல் நரஸிம்மாசார்ய ஸ்வாமியால் இரண்டு உபந்யாஸங்கள் நடத்தப்பட்டன. நெல்லூர் ஜில்லா ஜட்ஜும், ஸபையின் உப அத்யக்ஷர்களில் ஒருவருமான ஸ்ரீ.உ.வே. வி. பாஷ்யம் ஐயங்கார் ஸ்வாமி இரண்டு தினங்களிலும் அக்ராஸநம் வகித்து உபந்யாஸங்களை நடத்திவைத்தனர். ஸ்தலத்தில் தமிழ் பாஷா பரிசயமுள்ளவர்கள் பஹுவாக இல்லாவிட்டாலும் ஏராளமான ஸ்வாமிகள் உபந்யாஸங்களைக் கேட்க வந்திருந்தனர்.

முதல் தினம் ஸாயங்காலம் அர்ச்சாவதாரத்தைப் பற்றியும், இரண்டாவது தினம் ஸாயங்காலம் உபநிஷத்துக்களைப் பற்றியும் ஸ்ரீ. உ. வே. குடவாசல் ஸ்வாமி தெளிவாகவும் அழகாகவும் உபந்யஸித்தார். முதல் உபந்யாஸத்தில் ச்ரிய:பதியின் பர வ்யூஹ விபவாவதாரங்களின் தத்துவங்களையும், அவற்றைக் காட்டிலும் அர்ச்சாவதாரத்திற்கு ஏற்பட்டுள்ள ஏற்றத்தையும் எடுத்துக் காட்டி அர்ச்சாவதாரத்தில் மஹாஜ்ஞானிகளான ஆழ்வார்கள் பெற்றுள்ள அநுபவத்தையும் பரக்கக் கூறினார். இரண்டாவது உபந்யாஸத்தில் சாந்தோக்யம், ப்ருஹதாரண்யகம், தைத்திரீயம் முதலிய உபநிஷத்துக்களிலிருந்து பல உபாக்யானங்கள் மூலம் ஜீவஸ்வரூபம், பரமாத்ம ஸ்வரூபம் முதலிய தத்வங்களைத் தெளிவுபடுத்தினார்.

ஸ்ரீ.உ. வே. அக்ராஸநாதிபதி ஸ்வாமி முடிவுரையாகச் செய்த உபந்யாஸத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் சரித்ரத்தையும், அது முதலில் ஸ்ரீ அஹோபிலமடத்து சிஷ்யஸபையாக விருந்து பிறகு ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் பொதுவாக ஒரு ஸபையாக மாறி ஸித்தாந்தப்ரவசனமாகிய பகவத்கைங்கரியத்தை நடத்திவருவதையும் விஸ்தாரமாகக் கூறி, ஸர்வ லோகத்திற்கும் ஹிதத்தை உண்டுபண்ணுவதான இந்த ஸம்ப்ரதாயம் ஓங்குமாறு ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவர்களும் ச்ரம மெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஸ்ரீ. வை. ஸி. ஸபையை ஆதரிக்க வேண்டுமென்றும் ஸாதித்தார். வேதாந்த தீபிகையைப் போல் தெலுங்கில் ஒரு மாத ஸஞ்சிகையை ஸபையார் நடத்தவேண்டுமென்று ஸ்தல மகாஜனங்கள் ஆஸ்தைப்படுவதாகவும், ஸபையின் நிர்வாஹிகள் இதில் ச்ரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அந்த ஸ்வாமி முடிவில் ப்ரஸ்தாவித்தார்.

அக்ராஸநாதிபதி ஸ்வாமி, ஸபை விஷயத்தில் க்ருபையுடன் விசேஷ ச்ரத்தை எடுத்துக்கொண்டு உபந்யாஸங்களை நடத்தி வைத்தும், மற்றும் அந்த ஊர் ஸ்வாமிகள் விசேஷமாக ஆதரிக்குமாறு செய்ததற்காக ஸபை கார்யதர்சி ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மாசார்யர் க்ருதஜ்ஞதாவிஷ்கரணஞ் செய்துகொண்டு, தெலுங்கு ஸஞ்சிகை நடத்துவது ஸம்பந்தமாக நிர்வாஹிகள் பரிசீலனை செய்வார்களென்றும் விஜ்ஞாபித்துக் கொண்டார். இத்துடன் உபந்யாஸங்கள் முடிந்து ஸ்வாமிகள் எல்லோரும் பகவத் ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸ்ரீ ரங்கநாதனை மங்களாசாஸநஞ் செய்தனர். தீர்த்த ப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டுக் கூட்டம் பிறகு கலைந்தது.

ஸ்தலத்திலேயே ஸபையில் 25 அங்கத்தினர்கள் சேர்ந்தனர். இவ்விஷயமாக நெல்லூர் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமி, வக்கீல் கே. வி. ராகவாசார்ய ஸ்வாமி, வக்கீல் கே. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமி இவர்கள் எடுத்துக்கொண்ட ச்ரமம் மிகப் பாராட்டத்தகுந்தது.

---

(2) க்ரந்த முத்ரணம்.

சென்ற பதினொரு ஸஞ்சிகைகளாக ஸ்ரீ வேதாந்த தீபிகையாகிற நமது பத்ரிகையில், ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம், ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையால் அநுக்ரஹீதமாயுள்ள வ்யாக்யானத்துடன் அச்சுப் பதிப்பிக்கப்பட்டு வந்தது. இந்த ஸஞ்சிகையுடன் அது முடிவுபெறுகின்றது. அதன் ஸ்தாநத்தில், "ஜிதந்தே" என்று உபக்ரமிக்கும் ஸ்ரீ பகவத் ஸ்தோத்ரம் அடுத்த ஸஞ்சிகை முதல் ப்ரசுரிக்கப்படும். அதற்கு ஸ்ரீ. உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஒரு வ்யாக்யாநம் ஸாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். நமது அபிமாநிகளெல்லாரும் அதை ஆதரித்து, அதன் குணங்களை ஆநந்தத்துடன் அநுபவிக்கும்படி ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹிக்க வேணுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம். முதல் "ஜிதந்தே" ஸ்தோத்ரத்திற்கு ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை ஒரு வ்யாக்யாநம் அநுக்ரஹித்திருக்கிறார். அதுவும் ப்ரசுரிக்கப்படும்.

ஐப்பசி மீ 7உ

காரியதர்சி,
ஸ்ரீ வை. ஸி. ஸபை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

பத்ராதிபரின் குறிப்புகள்.

"ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை" என்று வ்யவஹரிக்கப்பட்டு வரும் நமது ஸபையும், அதன் பத்ரிகையாக இருக்கும் "ஸ்ரீ வேதாந்த தீபிகை" என்னும் மாஸாந்தர ஸஞ்சிகையும் ஏற்படுத்தப்பட்டு இப்பொழுது பதினேழு வர்ஷங்கள் ஆகின்றன.

ஸ்ரீ வை. ஸி. ஸபை. என்ன உத்தேசத்தைக்கொண்டு இந்த ஸபை ஏற்படுத்தப்பட்டதென்றும், இந்தப் பதினேழு வர்ஷ காலமாக இது நடைபெற்று வருவதால் ஜநங்களுக்கு என்ன ஆநுகூல்யம் ஜநித்திருக்கின்றதென்றும், ஆதி ப்ரவர்த்தகர்களால் உத்தேசிக்கப்பட்ட பலங்களுள் எவை எவ்வளவு கை கூடி வந்திருக்கின்றனவென்றும், கை கூடி வராமல் ஏதாவது ஒரு அம்சம் இருக்கும் பக்ஷத்தில் அதை ஸாதித்துக் கொள்வதற்கு ஸபையார் எவ்விதமான சீர்திருத்தத்தைச் செய்யவேண்டுமென்றும், இத்யாதியான விஷயங்களைப் பராமர்சிக்க இப்பொழுது ப்ராப்தமாகின்றது.

ஆரம்பத்தில் "ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை" என்னும் பெயருடன் இந்த ஸபை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஸபா ப்ரவர்த்தகர்களின் நோக்கங்கள், கேவலம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியின் விபூதிகளுடைய அபிவ்ருத்தியைத் தேடுவதற்கு மாத்ரம் ஸங்குசிதங்களாக இராமல், ஜநஸாமாந்யத்திற்கு ஆத்யந்திக ச்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுக்கும் உபாயங்களைத் தேடுவதிலேயே ப்ரவ்ருத்தங்களாக இருந்தன. வேதத்திற் சொல்லப்பட்டுள்ள ஸநாதந தர்

மங்களையும், அந்த வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாயுள்ள இதிஹாஸ புராணங்களில் காணப்படும் கதாரூபமான தர்மங்களையும், நமது பரமாசார்யராயும் லோகஹிதத்திற்கென்றே இவ்விடத்தில் வந்து அவதரித்தவராயுமுள்ள ஸ்ரீ பகவத் பாஷ்யகாரர் விவரித்திருக்கிறபடி தமிழ் பாஷையில் விவரித்து, அதன் மூலமாக ஜநங்களுக்கு நன்னடத்தையைப் போதிப்பித்து, அவர்களை இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ச்ரேயஸ்ஸை அடையும்படி செய்யவேண்டும் என்பதே அவர்களுடைய முக்ய கருத்தாக இருந்தது. பிறகு இந்த ஸபை "ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை"என்று மாறுதல் அடைந்தபொழுதும், அந்த நோக்கங்களே ப்ரதாநங்களாகக் கைப்பற்றப்பட்டு வந்தன. இந்த நோக்கங்களை ஸாதித்துக்கொள்ளும் பொருட்டு ஸபா ப்ரவர்த்தகர்கள் இந்தப் பதினேழு வர்ஷ காலமாக அநேக உபாயங்களைப் பஹுமுகமாக அநுஷ்டித்து வருகிறார்கள். பண்டித ப்ரவரர்களைக் கொண்டு ஆங்காங்கு உபந்யாஸங்களைச் செய்விப்பதும், ஒவ்வொரு வர்ஷம் முடிவிலும் வித்வத் ஸதஸ்ஸையும் ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தையும் கூட்டுவதும், தீபிகையில் தத்வார்த்தம் முதலிய விஷயங்களின் விசாரத்தைச் செய்வதும் அவர்களாற் செய்யப்பட்டுவரும் உபாயங்களுள் முக்யமானவை. இவைகளின் அநுஷ்டாநங்களில் அநேக அம்சங்களில் லோபமும், மற்றும் அநேக அம்சங்களில் அநுசிதமான ஆதிக்யமும், இன்னும் இம்மாதிரியான வேறு தோஷங்களும் ஸம்பவித்திருக்கக் கூடும். ஆனால், அவைகளெல்லாம் அல்பங்களாகவும் ஆஸ்திகர்களால் பொறுத்துக்கொள்ளக் கூடியவைகளாகவுமே இருந்திருக்கின்றனவென்றே நாம் நினைக்கிறோம். மிதஜ்ஞர்களாகவும் மிதமான சக்தியை உடையவர்களாகவுமிருக்கும் மநுஷ்யர்களுடைய அநுஷ்டாநங்களில் ஸ்கலநங்கள் ஸம்பாவிதங்களே.

சென்ற பதினேழு வர்ஷ காலமாக இந்த ஸபையின் ப்ரவ்ருத்தியால் ஜநங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநுகூல பாகங்களைப் பராமர்சிக்கும்பொழுதும் நாம் எவ்வித நிர்வேதப்படுவதற்கும் காரணமில்லையென்றே புலப்படுகின்றது. அபண்டிதர்களான ஸாமாந்ய ஜநங்களுக்கு இது உபகாரகமாக இருந்திருக்கின்றது என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ள வேண்டும். தத்வஜ்ஞாநத்தை ஸாக்ஷாத்தாக உணர்த்துவதற்கு இது அபர்யாப்தமாக இருந்தபோதிலும், ஆமுஷ்மிக விஷயங்களில் அபிருசியை ஜநிப்பித்து, பரம்பரையாக இது அவர்களுக்கு ச்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுத்திருக்கின்றது என்பதில் ஆக்ஷேபமில்லை. பண்டிதர்கள் விஷயத்தில் கூட இது ஒருவாறு உபகரித்தே இருக்கின்றது. ஏற்கெனவே அவர்களால் அறியப்படாமல் இருந்த அம்சங்கள் ஒன்றையும் இது புதிதாக அவர்களுக்குப் போதிக்கவில்லை என்பது உண்மையேயானாலும், பால்யத்தில் அவர்களால் அப்யஸிக்கப்பட்ட வித்யை

யைப் பரிஷ்கரித்துக் கொள்வதற்கும், அதை மஹா ஜநங்களுக்கு உபகாரக மாகும்படிச் செய்வதற்கும் இது பலமான ஹேதுவாக இருந்திருக்கின்றது. இவை யெல்லாம் அல்பமான ப்ரயோஜநங்கள் என்பது உண்மையே. ஆனால், ஸபா ப்ரவர்த்தகர்கள் இந்த வ்யாபாரத்தை ஏற்றுக்கொண்டபொழுது எவ்வித ப்ரயோஜநத்தையும் கவனியாமலே இதை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நாம் அறிவோம். அந்தரங்கத்தில் தோன்றின ஒரு பகவந் நியமநமே அவர்களுடைய ப்ரவ்ருத்திக்கு முக்ய காரணமாக இருந்தது. அப்படிச் செய்யப்படும் ப்ரவ்ருத்திகள் வேறு ஒரு ப்ரயோஜநத்தை அபேக்ஷிக்க மாட்டாவன்றோ? நாம் செய்வது ஸத்கார்யமாக இருந்தால் அதுவே பரம ப்ரயோஜநமாக வேண்டும். ஆகையால், நமக்குத் தென்படும் ப்ரயோஜநங்கள் அல்பங்களாக இருந்த போதிலும் 'பகவந் முகோல்லாஸம் இதனால் ஏற்படுகின்றது' என்று அறிந்திருக்கும் ஸபையோர்கள் எவ்வித நிர்வேதத்தையும் அடைவதற்குக் காரணமில்லை.

இவ்விதம் ஸபையாற் செய்யப்படும் கார்யங்கள் பெரும்பாலும் த்ருப்திகரமாக இருக்கையிலும், இம்மாதிரியான ஸபைகளாலேயே நடத்தப்பட வேண்டிய வேறு சில நடவடிக்கைகள் நடத்தப்படாமல் அநாதரிக்கப்பட்டு வருகின்றன வென்றும், அந்த நடவடிக்கைகளை இந்த ஸபையார் செய்யாமல் இருக்கும் வரையில் அவர்கள் தமது தர்மத்தைப் பூர்ணமாகச் செய்தவராகமாட்டார் என்றும் நமக்கு ஒரு அதிசங்கை ஜநிக்கின்றது.

கேவலம் தத்வஜ்ஞாநத்தை விளக்குவதும் அதற்கு அபேக்ஷிதமான ஸாதநங்களை மாத்ரம் தேடுவதும் இக்காலத்திற்குப் போதுமான ப்ரவ்ருத்தியாகமாட்டா. தர்மங்களுக்கு மிகுந்த க்லாநி நேர்ந்திருக்கிறபடியால் அந்தத் தர்மங்களை ஸ்தாபித்துக்கொள்ள நாம் யதாசக்தி ப்ரவ்ருத்திக்க வேண்டியது அவச்யமென்று நாம் நினைக்கிறோம். ஜகத் முழுவதும் தர்மத்திலேயே ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றது. அந்தத் தர்மம் தளர்ச்சியை அடைந்தால் எவ்விதத்தில் ஜகத்துக்கு ஸ்திதி ஏற்படும்? தவிரவும், மிக்க ஊக்கத்துடன் நீண்டகாலம் தர்மங்களைச் சரிவர அநுஷ்டித்து வருவதனாலேயே ஜ்ஞாநம் நிலைபெறுகின்றதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவ்விதம் ஜ்ஞாந பரிபாகத்திற்கு மூல காரணமாயுள்ள தர்மாநுஷ்டாநம் மலிநமாகி வந்தால் அதை நாம் அநாதரித்துப் போசலாமோ? ஜ்ஞாந பரிபாகம் நமது ச்ரே

யஸ்ஸுக்கு அவச்யம் அபேக்ஷிதமன்றோ? பூர்வ காலத்தில் நமது தேசத்தை அலங்கரித்து வந்த மஹாந்களுடைய சமதமாதி ஸம்பத்துக்களுள் ஒரு அம்சமாவது இக்காலத்தில் எங்கேயாவது தென்படுகின்றதா? துஷ்டியும், க்ஷாந்தியும், ஆர்ஜ்ஜவமும், ஆஸ்திக்யமும் எவ்விடத்திலோ ஒளிந்து போய்விட்டன போலத்தோன்றுகின்றதே! அர்த்தலாபம் கிடைக்குமானல், பொய்பேசுவதும் மோசம் செய்வதும் தர்ம்யங்களாகவே நினைக்கப்படுகின்றன. அஸாதுக்களுடைய ஸங்கத்தின் பலமாகவோ, அவர்களுடைய உபதேசத்தின் பலமாகவோ, நமது பாலர்களுடைய சித்த வ்ருத்தியும் மாறி வருகின்றது.

‟யெநாவத்ருவதெ ஸாயூஸ ஸாயூஷெந தூஷ்யதி''

என்கிறபடி, லஜ்ஜைப்படுவதற்குக் காரணமாயுள்ள க்ருத்யங்களில் அவர்கள் மிகுந்த ஸந்தோஷத்தையே அடைகின்றார்கள். இம்மாதிரியான சித்த வ்ருத்தி ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு ஹேதுவாகுமோ? இந்த ஆபத்தைத் தடுக்க முயல்வது இம்மாதிரியான ஸபைகளின் முக்யமான தர்மமன்றோ? இந்த விஷயத்தை நமது ஸபா ப்ரவர்த்தகர்கள் சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம். கரை புரண்டு வரும் காட்டாற்றின் ப்ரவாஹம் போல் பயங்கரமாக இருக்கும் இந்தத் துர்தசையைப் பூர்ணமாகத் தடுப்பது அஸாத்யமே யாயினும், நாம் தகுந்தபடி முயற்சி செய்தால், சிற்சில பாகங்களிலாவது நாம் நமது வைதிக ஸ்ரீயை ஸம்ரக்ஷித்துக் கொள்ளக்கூடும் என்னும் நம்பிக்கை இருக்கிறபடியால் நாம் இம்மாதிரி ப்ரார்த்திக்கத் துணிந்தோம்.

* * *

தேவாலயங்களின் நிந்தை.

சென்ற இரண்டொரு மாஸ காலமாக, 'மஹாத்மா காந்தி' என்னும் நமது ஹிந்து ஆஸ்திகர், தென் இந்தியாவில் யாத்ரை செய்துகொண்டு, பற்பல விடங்களில் ஜநங்களுக்கு நன்னடத்தையைப் போதிப்பித்து வருகிறார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இரண்டொரு இடங்களில், அவர், நமது தேவாலயங்களைப் பற்றி நிந்தித்துப் பேசினதாக நாம் கேள்விப்படுகிறோம். அப்படி அவர் நிந்தித்துப் பேசியிருந்தால் அது மிகவும் சோசநீயமே. நாம் அவரைப் பெரிய ஆஸ்திக ஹிந்துவென்று க்ரஹித்திருக்கிறோம். அநேக உத்தமங்களான ஆத்ம குணங்கள் அவரிடம்

குடிகொண்டிருக்கின்றன. நமது தேசத்திய மஹாராஜாக்களாலும் அவர் பிருதியும் கௌரவிக்கப்பட்டு வருகின்றார். அப்படிப்பட்ட பெரியவர், ஹிந்துக்களெல்லாராலும் பரம பக்தியுடனும் ச்ரத்தையுடனும் விசேஷித்துக் கொண்டாடப்பட்டுவரும் தேவாலயங்களைத் தூஷித்தாரென்றால், அது நம்பத் தகுந்ததாகவே நமக்குத் தோன்றவில்லை. நமது ஆலயங்களில் சிற்சில தோஷங்கள் இருக்கக்கூடும். அவ்விடங்களில் நடைபெற்றுவரும் உத்ஸவாதிகளெல்லாம் ஸகல அம்சங்களிலும் சாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கிறபடியே நடைபெற்று வருகின்றனவென்று நாம் சொல்லத் துணியோம். ஆனால், அம்மாதிரியான சில தோஷங்கள் இருப்பது காரணமாக, "இந்தத் தேவாலயங்களெல்லாம் குலடைகள் வஸிக்கும் இடம்" என்றும், "அவ்விடத்தில் தேவதா ஸாந்நித்யமே இல்லை" என்றும், அவரைப் போன்ற மஹான் சொல்லக்கூடுமோ? அத்யந்தம் அநபிஜ்ஞர்களாகவும், கேவலம் தோஷைக த்ருஷ்டிகளாகவும், ஸ்வார்த்த பரர்களாகவும், அநார்ஜவம் அசுத்தம் முதலியவைகளால் நிறைந்தவர்களாகவும் இருக்கும் தேசாந்தரீய ஸ்த்ரைணமும் ஸ்த்ரீ ப்ராயராயிருக்கும் மற்றை அவிவேகிகளும் நமது மதத்தையும் ஆசாரத்தையும் இம்மாதிரி தூஷித்தால் அதை ஒருவாறு பொறுத்துக்கொள்ளலாம். இவரைப் போன்ற பெரியோர்களும், அந்த ஸ்த்ரைணத்தைப் போலவே தூஷணங்களில் ப்ரவ்ருத்திக்க ஆரம்பித்தால், அதை நாம் எவ்விதத்தில் ஸஹிக்கக்கூடும்? இவரைக்காட்டிலும் பல மடங்கு சிறந்த ஆத்மகுண பூர்த்தியை உடைய மஹான்கள் இந்த ஆலயங்களைப் பார்த்திலரோ? அவர்கள் காலத்தில், இப்பொழுது தென்படும் தோஷங்கள் இந்தத் தேவாலயங்களில் இல்லாமல் இருந்தனவா? தமக்குத் தென்பட்ட தோஷங்களை அவர்கள் யதாசக்தி நிவ்ருத்திப்பிக்க முயன்றார்களே தவிர, இம்மாதிரி தூஷிக்கவாவது ஸந்நிதிகளைப் பரித்யஜிக்கவாவது முயன்றார்களில்லை. அம்மாதிரி நடையன்றோ இவருக்கும் உபபந்நமாக இருத்தல் வேண்டும்? ஸாஹஸமாக எவ்வித நிந்தையையும் செய்யத் துணியாத இவர், ப்ராக்ருத விஷயத்தில் எவ்வித ஆலோசனையையும் செய்யாமல் நிந்திக்க ப்ரவ்ருத்தித்தாரே என்பதுதான் நம்மை வருத்துகின்றது. இது யாருடைய தௌர்பாக்யமோ அறிகிலோம்.

அருளிச்செய்தாரே யன்றி, உகந்தருளியுள்ள தேசத்துக் கெல்லாம் ஸ்தோத்ரம் அருளிச்செய்யவில்லை யன்றோ? ஸங்கதி ஏற்படாத ஸ்ரீமுஷ்ணம் திருநாராயணபுரம் முதலிய ஸ்தலங்களை தேசிகன் மங்களாசாஸநம் பண்ணவில்லை யென்று ஏற்பட்டுவிடுமா? ஆனதால் தேசிகன் இங்கு எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணவில்லை யென்று சொல்வது, ஸ்ரீ ஆராவமுதனை அநுபவிக்காத ஒரு குறையை தேசிகனுக்கு ஏற்படுத்துவதாகுமே யன்றி வேறில்லை. இது நிற்க, ப்ரதி ஸம்வத்ஸரமும் தூப்புற் புனிதன் உத்ஸவ அவப்ருத தினத்தன்று ஸ்ரீ ஆராவமுதாழ்வான் பஞ்சாயுத தரனாய் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளும் ஸமயத்து அவனை கண்ணாரக் கண்டு ஸேவித்தவர்களுக்கு ஆராவமுதாழ்வான் திறத்து, தேசிகன் விசேஷமாக ஈடுபட்டவரே என்பதும், அது தோன்ற தேசிகனிடம் அவனுக்குள்ள க்ருபா விசேஷமும் பண்டித பாமர ஸாதாரண்யேந எல்லாருக்கும் உபபாதியாமலே நன்கு விளங்கும்.

இவ்வெம்பெருமான் குடந்தையின்கண் "[illegible]" என்பதன் அர்த்தத்தை எல்லாரும் அறியும் வண்ணம், ஸ்ரீ ஆராவமுதன் வைதிக விமாநத்தின் நடுவே எழுந்தருளி இருக்குமதுவும் மஹார்ஹமான ரத்நஹாரத்தின் நடுநாயகம் போலன்றோ விளங்குகிறது. அதாவது இத்திவ்ய தேசத்துக்கு அணித்தாக நான்கு பக்கங்களிலும் திருவிண்ணகர், திருநறையூர், தண்சேறை, நந்திபுரவிண்ணகரம், கூடலூர், கவித்தலம், புள்ளம்பூதங்குடி, ஆதனூர், திருவெள்ளியங்குடி தொடக்கமாக உள்ள ஒன்பது திவ்யதேசத்து எம்பெருமான்களன்றோ நவரத்ந மணிகள் போலச் சூழ்ந்திருக்கின்றனர். ஆழ்வார்களில் பெரியாழ்வார் என்பவர் தமது ப்ரபந்தாரம்பத்திலேயே "[illegible]" என்னுமாப்போலே ஸ்ரீ ஆராவமுதாழ்வான் விற்பிடித்த கையுந் தானுமான அழகு தோன்ற நின்றமை கண்டு, "சார்ங்க மென்றும் வில்லாண்டான் றன்னை" என்று அவனைப் பல்லாண்டு பாடியும், அவன் கண்ணனென்றபடி தோன்றத் தாலாட்டியும், சங்கம் பிடிக்கும் தடக்கையை நினைந்து 'கோல் கொண்டுவா' வென்று அழைத்தும் மங்களா சாஸநம் செய்தருளி யிருக்கிறார். சங்கம் பிடிக்கும் தடக்கையை அத்யாபி ஸேவித்தாலும் சங்கமானது எம்பெருமான் தோளில் செவியின் கீழ்த் தாழ்ந்து இருக்கு மிருப்பு, இவர் திருமகளாரான ஸ்ரீ கோதாபிராட்டியின் அருளிச் செயலான

"சந்திர மண்டலம்போல் தாமோ தரன்கையில்
அந்தர மொன்றின்றி யேறி யவன்செவியில்
மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே!
இந்திர னுமுன்னோடு செல்வத்துக் கேலானே" [நாச். தி. 7-4.]

என்றும் பாசுரத்தை அந்வர்த்தமாகச் செய்கிறது. ஆனதால் சார்ங்கம் பிடிக்கும் பெருமை எப்படி மற்ற எம்பெருமான்களிற் காட்டில் அழகிதோ அப்படியே சங்க மேந்தும் பெருமையும் அழகிது.

மற்றும் இப்பிராட்டி, இவ்வெம்பெருமானோடு கலவியி லுள்ள ஆதராதிசயம் தோன்ற "பீதகவண்ண வாடைகொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே" என்றும், "குடந்தைக் கிடந்த குடமாடி, நீலார் தண்ணந் துழாய்கொண்டென் நெறிமென் குழல்மேல் சூட்டீரே" என்றும், "அமுத வாயி லூறிய நீர்தான் கொணர்ந்து புலராமே பருக்கி யிளைப்பை நீக்கீரே" என்றும் இப்படிப் பலபடிகளால், அவனுடைய திருமேனி ஸம்பந்தமுள்ள ஏதாவதொரு வஸ்துவின்றித் தன் ப்ராணதாரகமான வஸ்து வேறில்லையென்றும், அப்படி உங்களுக்கு என்னை ஸத்தை யுடையவளாகச் செய்ய வேணுமென்னும் நினை வுண்டாகில் அங்கே ஸம்பந்த முள்ள தொன்றைக் கொண்டுவந்து என்னை ஸ்பர்சித்து என்னை ஸத்தைபெறச் செய்யுங்கோளென்கிறாள்.

"பாலா லிலையில் துயில்கொண்ட பரமன் வலைப்பட் டிருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல் வேண்டிற் றெல்லாம் பேசாதே
கோலால் நிரைமேய்த் தாயனுக் குடந்தைக் கிடந்த குடமாடி
நீலார்தண்ணந் துழாய்கொண்டென் நெறிமென் குழல்மேல் சூட்டீரே"
[நா தி 13-2]

["கயநயம் ஸிஸுஸ்ஸெதெ ஸொகெநாய உவாமதெ। ஸாவயாம வடவருக்ஷஸ்ஷு" என்கிறபடியே ஆலிலைத் தளிரிலே கண்வளர்ந் தருளின ஒருவன் அகடித கடநா ஸாமர்த்யத்திற்குத் தோற்றிறே அடிமைப்பட்டதும்; அப்படி அவன் வலையிற் சிக்கிய வென்னை அல்லாதவற்றைச் சொல்லி எனக்கு மேன்மேலும் ஸந்தாப காரணமான வ்யாபாரங்களைச் செய்யாதேயுங்கள்; பின்னை செய்ய வடுப்பதென் என்னில்: ஆயனுக் கோலால் நிரை மேய்த்துச் செழுந்தெருவே ஆராரெனச் சொல்லி; சீரார் குடமிரண்டேந்திக் கூத்தாடி, அந்த ஆயாஸந் தீரக் குடந்தையில் சாய்ந்து கிடக்கிறான் ஒருவன்; அவன் பக்கல் சென்று பசுமை விஞ்சின திருத்துழாய் கொண்டு என் மெல்லிய குழல்மேல் சூட்டீரென்கிறாள்.] இப்படிப் பேசுகிறவள்தான் ஆரென்னில் "ஸ்வோத்ஸ்ஷ்டாயாம் ஸ்ரஜி நிமஹிதம் யா ஸ்வயம்" என்று பெற்றவளிறே. ஸ்ரீரங்கமன்னன் முதலானோரும், "விஸாயஸ்த ரஜஸா கநெந நாஸா வக்ஷஸ்ஸுநெ கநுாஸ்த அடிநெந। சூஜோதிதொவி நிமஷெவிஜஸ் ஸவிய்யந்ஹ யதெத தெந ஸிரஸாதவ ஊஸிராஜ்ஞா:" என்கிறபடியே ஆண்டாள் சூடிக்களைந்த மாலைகள் பெற

வன்றோ படாதபாடு படுவது? அங்ஙனமிருக்க ஆத்தலை இத்தலையாக வாயிற்று இருப்பது. இத்தனைக்குங் காரணம் இவளுக்கு ஸ்ரீ ஆராவமுதனிடத்துள்ள கரைபுரண்ட காதலென்பதில் ஐயமுண்டோ?

இப்படி இவளுக்கு ஆராவமுதாழ்வானிடத்தில் உள்ள ஈடுபாட்டின் மேன்மை "தஸ்யாஸ்த வாஸாதி கெவி" என்கிறபடி எல்லை நிலத்தளவு மன்றோ வளர்ந்து கிடப்பது?

"சாக்கியங் கற்றோம் சமணங் கற்றோம் சங்கரனாராக்கிய வாகம நூலாராய்ந்தோம் பாக்கியத்தால் செங்கட்கரியானைச் சேர்ந்தோம் யாம் தீதிலமே" என்றபடி ஒவ்வொரு சமயங்களினுள்ளும் புகுந்து ஸாராஸார விவேகம் பண்ணி, பரதத்வ நிர்த்தாரணம் பண்ணி யருளிய திருமழிசைப் பிரானும், இவ் வெம்பெருமான் கிடந்ததோர் கிடக்கைகண்டு, அவ்வழகில் ஆழ்ந்து,

"இலங்கைமன்ன னைந்தொடைந்து பைந்தலை நிலத்துக
கலங்கவன்று சென்றுகொன்று வென்றிகொண்ட வீரனே!"

என்றாரம்பித்து அதாவது ராவணன் பத்துத்தலையும் புற்றுமறிந்தன போலப் புவி மேல் சிந்தவும் அவன் உள்ளம் பதறவும், அவனை நிரஸித்து ஜயம்பெற்ற சூரனே! என்று அவன் ராமாவதாரம் செய்தமையை நினைந்தும்,

"செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட வுயர்ந்தவேய்
விழுந்துலர்ந் தெழுந்துவிண் புடைக்கும்வேங் கடத்துணின்று
எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழுஞ்
செழுந்தடங் குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே."
[திருச்சந்த விருத்தம்.-60.]

என்னுமளவாக விண்ணபித்தும் அவனொன்றும் பேசாமையாலே மேல் "நடந்தகால்கள்" என்கிறார்.

இதனால், ராமாவதாரம் பண்ணினவன் ஸ்ரீ ஆராவமுதன் என்ற திருநாமத்தோடு அர்ச்சாரூபியாய் ஸேவைஸாதிக்கிறானென்று ஏற்படுகிறது. இவ்வர்த்தம் ஸ்ரீமத்ராமாயணம் யுத்தகாண்டம் 101-வது ஸர்க்கத்தில் "கூத்தாரம் ஸர்வலோகஸ்ய" என்று ஆரம்பித்த ஸ்ரீராமபத்ரனைப் பார்த்து ப்ரஹ்மாவானவர் "நீ மநுஷ்யனன்று; ஆச்ரிதஸம்ரக்ஷணத் துக்காக மநுஷ்ய ஜாதீயனாய் வந்து அவதாரம் செய்தருளினையே யன்றி நீ ஸர்வேச்வரனே" என்று எம்பெருமானுடைய அவதார ரஹஸ்யத்தை நிரூபிக்குமிடத்து, "அதஸ்த்வம் ஜய: ஸாங்க்யநா ஹரிர் கெஸ: வஸுஷ: வஸுஷொ

தஃ ।" என்றாரிறே. அதாவது இருகைகளோடு கோதண்டபாணியாய் ஸேவை ஸாதிக்கிற நீ, நான்கு திருக்கைகளோடு கூடின சார்ங்கபாணி யன்றோ என்பது கருத்து.

ரிஷிகள் அநேகமாகப் பகவானை ஸ்தோத்திரம் பண்ணுமிடத்து "பரம் வஸுக்ருமஹாயவ:" இத்யாதி பதப்ரயோகங்கள் பண்ணி யிருக்கிறார்கள். அவ்வாறிருக்க இந்த வால்மீகி பகவான் சதுர்ப்புஜத்வத்தோடு சார்ங்கதந்வத் வத்தையும் சேர அநுஸந்தித்து, அப்படிப்பட்டவனே இந்த்ரியங்களை யடக்கி யாளுபவன், அவனே புருஷன் புருஷோத்தமனென்று சொல்லத் தகுந்த வனும் அவனே என்று கொண்டாடி இருப்பதைப் பார்த்தால் ஸ்ரீஆராவ முதன் திறத்து இவர் அபிநிவேசம் மிக்க மேம்பாடுடைய தென்பது ப்ரயாஸ மின்றி ஊஹிக்கத்தகுந்ததாக இருக்கிறது. இதைத் திருவுள்ளத்தில் கொண்டு தான் இவ்வாழ்வாரும் ஸ்ரீ ஆராவமுதனை மங்களாசாஸனம் பண்ண வாரம் பிக்கையில் "இலங்கைமன்னனை.........வீரனே!" என்று ஸம்போதித்து, இறுதியில் அவ்வவதாரத்தில் "நடந்தகால்கள் நொந்தவோ?" என்றார்.

வேங்கடத்துமால் குடந்தையில் கிடக்கையாவது:—மண்ணோர் விண் ணோர்க்கும் கண்ணுவானனதண்ணார் வேங்கடவிண்ணோர் வெற்பனை ஸ்ரீநிவாஸனும் வேங்கடாசலத்தில் உள்ள வாஸத்தை விட்டு, தேன் மிக் கிருந்துள்ளதும் ஸர்வதா பூத்த சோலைகளாலே சூழப்பட்டதும், களைப் பாறச் செவ்வியதான ஸ்தாநமாகிய குடந்தையிலே புகுந்தருளினனன்றோ?

இந்த அர்த்தம் ரிஷியாலும், "கிஞ்சைதத் ஸஹஸ்ரஸ்ய ஸ்வயம் ப்ரகாஶதோஹரி: । வேங்கடாத்ரௌ ஸ்திதாத் ப்ரத்யக்ஷீக்ருதகாரண: । ஸ்வகீயநித்யலோகஸ்ய ஸ்வதேஶாம்ஶதோஹரி: । ப்ரத்யக்ஷீக்ருத ப்ரத்யய ப்ரத்யக்ஷதேவதா । வேதாக்ய ஸ்வரூபஜாதீய ஸ்தலம் க்ஷேத்ரம் ப்ராப்தம் । ஸ்தம்ப வேதாஹ்வயம் வாஸம் ப்ரத்யக்ஷகாரண்ய ஸமாஶ்ரித: । ஶ்ரீதாமஸ்ஸூ ஸ்வதேஶம் வஸந்து ஸந்ஹாராஶ்ரித: ॥ [கும்ப" மாஹா. 45-ம் அத்.] என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

"நடந்தகால்கள் நொந்தவோ நடுங்கஞால மேனமாய்
இடந்தமெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்தகா விரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே"
[திருச்சந்த விருத்தம்—61]

[நீ ராமாவதாரத்தில் கொடுங்கதிரோன் துன்னுவெயில் வறுத்த வெம் பரல் மேல் பஞ்சடியால் கானகத்தில் நடந்த இளைப்போ? கிருஷ்ணாவதாரம்

செய்து காடுகளுக்கு போய்க் கன்றுகள் சென்ற சென்ற விடமெங்கும்போய், அவைகளை மேய்த்த இளைப்போ? அன்றேல், இப்படித்தான் ஈண்டு தாவிய அசைவோ? அன்றேல், லோகம் நடுங்கும்படி வராஹாவதாரம் பண்ணி, அண்ட பித்தியில் ஒட்டிக்கிடந்த பூமியை உத்தாரணம் பண்ணின களையோ? நீர்வளம் நிலவளம் பொருந்திய இக்குடந்தையின் கண் நீ கிடந் தருளின காரணத்தை எனக்கு நீ எழுந்திருந்து சொல்லவேணு மென்று பிரார்த்திக்க, அவ்வளவில் எம்பெருமானும் பத்துடையடியவர்க் கெளியனுகையாலே இந்த பக்திஸாரர் திறத்து அர்ச்சாஸமாதி குலை தலையும் ஒரு பொருட்டாக எண்ணுமல் எழுந்திருக்க உத்யோகிக்க அவ்வ வஸரத்தில் இருந்த வழகு நித்யமாய்ச் செல்லவேணு மென்பதை உட் கொண்டு, "வாழி கேசனே" என்று அங்குற்றைக்கு மங்களாசாஸநம் செய்தருளினதும், அப்படியே பின்னுரும் தன்னை அநுபவிக்க எளியனு யிருக்கு மிருப்பு இவ்வெம்பெருமானிடத்தி லன்றோ உள்ளது.

இப்படி, தன்னுடைய ஆஜ்ஞாரூபமான ஆகமாதிகளில் வ்யக்த மாய்ச் சொல்லப்பட்டிருக்கிற அர்ச்சாவதார ஸ்திதியையும் கடந்து விசேஷ பக்தி பரித வ்யக்தி விசேஷத்திலே தன்னை அழியமாறி விபவாவதா ரம்போல் ஸேவை ஸாதித்தருளின க்ரமத்தை உலகத்தார் அறியும் வண் ணம் செய்வித்ததைத் தனக்குச் செய்த உபகாரமாக நினைத்து, திருமழிசைப் பிரானென்று திருநாமஞ் சாத்தியருளினதும், ஸம்ப்ரதாய ப்ரஸித்தமிறே. பின்னும் இவ்வெம்பெருமான் பக்கலுள்ள ப்ரேமாதிசயத்தால் அன்றோ இவன் திருவடிவாரமே தமக்கு உத்தேச்யம் என்று இரண்டாயிரத்தெழு நூறு ஸம்வத்ஸரம் இங்கு யோகநிஷ்டையில் எழுந்தருளியிருந்து, தமது அவதார கார்யத்தைத் தலை கட்டிப் போந்தார்.

நாலு கவிப்பெருமா ளென்றும், மாறன் பணித் தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற வந்தவனென்றும்,

"அங்கமலத் தடவயல்சூ ழாலிநாடன்
அருள்மாரி யருட்டமுக்கி யடையார்சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன்
கொற்றவேற் பரகாலன் கலியன்" [பெ. தி. 3-4-10.]

என்றும், பெருமைவாய்ந்த திருமங்கை யாழ்வாரும், அநாதிகாலந் தொடங்கி 'சிலம்படியுருவிற் கருநெடுங் கண்ணார் திறத்தன யறத்தையே மறந்து, புலன்படிந் துண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளா' போக்கின வளவிலும், யாத்ருச்சிக ப்ராஸங்கிக ஸுக்ருத விசேஷமும் இவர் பக்கல் காணுமையாலே இவர் செய்யும் துஷ்க்ருதத்தையே பற்றுசாகக் கொண்டு,

பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போல் கருடாரூடனாய் எழுந்தருளின. ஆராவமுதாழ்வானைக் கண்ணாரக் கண்டு, அந்த அநுபவம் உள்ளடங்காமையால் "வாடினேன் வாடி" என்று தொடங்கி அவன் பரத்வத்தைப்பேசி, அவனுடைய ஸௌலப்யம் தோன்ற

"ஆவியே யமுதே யெனநினைந் துருகியவரவர் பணைமுலை துணையா
பாவியே னுணரா தெத்தனை பகலும் பழுதுபோ யொழிந்தன நாள்கள்
தூவி சேரன்னம் துணையொடும் புணரும் சூழ்புனல் குடந்தையே
தொழுதேன் விளையுய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்
னும் நாமம்,' [பெ. தி. 1-1-2.]

என்று கீழில் காலமெல்லாம் ஹேயமான விஷயங்களில் கண்ணோட்டம் வைத்து, அவற்றை 'ஆவி' யென்றும், ப்ராணதாரகமான 'அமுத' மென்றும், சொல்லிச் சொல்லி நெஞ்சுருகி மஹா பாபியான நான் பகவதநுபவத்தில் செல்லக்கடவ அருமந்த காலங்களை யெல்லாம் வீணே போக்கினேன்; அப்படிப்பட்ட நானே அதே நாக்கினால் உஜ்ஜீவிக்கும் வண்ணம் 'நாராயணா வென்னும் நாமம் கண்டு கொண்டேன்' இந்தப் பெருமை குடந்தையைத் தொழுதன்றோ பெற்றதென்கிறார்.

இப்படி, திருமொழிக்கு ப்ரதிபாத்யனாக ஸ்வாமியையே வைத்து உபக்ரமித்துத் திருமொழி முழுவதையும் ஸ்வாமி விஷயமாக்கி அருளிச் செய்துங்கூட, ஆழ்வாருக்கு இவ்வெம்பெருமான் திறத்துள்ள ஆராத காதல் உள்ளடங்காமை இவர் திருத்தோளவும் செல்ல மங்களாசாஸநம் பண்ணும்படி யன்றோ கரை புரண்டோடியது.

திருமொழி முழுவதும் ஆராவமுதன் விஷயமென்பதற்கடி என் என்னில்: "[illegible] ।
[illegible]" என்கிற ப்ரமாணத்தின்படி ப்ரபந்தாரம்பத்தில் "சூழ்புனல் குடந்தையே தொழுது" என்று உபக்ரமித்தும், இடை இடையே பத்துக்கள்தோறும் ஸ்வாமியின் திருவுருவை நினைந்தே மேல்மேல் மங்களாசாஸந ப்ரவ்ருத்தரா யிருக்கிறபடியையும்

"வந்தநாள் வந்தென் னெஞ்சிடங் கொண்டான்
மற்றோர் நெஞ்சறியா னடியேனுடைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க் கென்னைச்
சேர்கொடானிது சிக்கெனப் பெற்றேன்

கொந்துலாம் பொழில்சூழ் குடந்தைத்தலைக்
கோவினைக் குடமாடிய கூத்தனை
எந்தையை யெந்தை தந்தை தம்மானை
எம்பிரானை யெத்தால் மறக்கேனே." [பெ. தி. 7-3-3.]

என்று ப்ரதம தர்சநம் எப்போது ஏற்பட்டதோ அப்போது தொடங்கி மற்றோர் நெஞ்சையும் விஷயீகரியாமல் என் னெஞ்சை யிடமாக கொண்டான்; என் மனதும் அவனும் வேறு அன்று என்று தோற்றும்படி ஆனான்; அரவத் தமளியினோடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப் பாவையுந் தாமுமகம்படிவந்து புகுந்தான். வடதடமும் வைகுந்தமும் மதிள்துவாராபதியுமிடவகைக ளிகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டான். இப்படி, உபகாரகனானவனை நான் எங்ஙனே விடுவேன்? என்று தன் தன்மையைச் சொல்லியும்,

" வந்தாயென்மனத்தே வந்து நீ புகுந்தபின்னை
எந்தாய்! போயறியா யிதுவே யமையாதோ?
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்துகந்த மைந்தா!"
[பெ. தி. 8-9-5.]

[அவன் தானிருந்த இடந்தேடி வந்ததை நினைத்து நானிருந்தஇடம் தேடி வந்தாய், அதோடு நிற்காமல் என்மனத்தில் புகுந்தாய், அதன்பின் நித்யஸூரிகள் பக்கல் போவதாகவும் நீ நினைக்கிறதில்லை, இந்தப் பேறு ஒன்று போதாதோ?] என்று அவன் தன்னை விடாமையையும் காட்டித் தந்து, ப்ரபந்த நிகமநாவஸரத்தில் "அன்றாயர் குலமகளுக்கு" என்ற பாசுரத்தில் "தண்குடந்தைக் கிடந்தமாலை நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே" யென்று தனக்கு ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அவனல்லது செல்லாமையை வெளியிட்டு ப்ரபந்தத்தை நிகமித்ததைப் பார்க்க வேறு ஸாதநாந்தரம் தேடி உபபாதிக்கவும் வேண்டுமோ? இப்படிப்பட்ட பெருமைதோன்ற ப்ரதி ஸம்வத்ஸரம் மார்கழிமாதம் திருவத்யயந உத்ஸவம் பகல் பத்து சாற்றுமறையான திருமொழி சாற்றுமறை தினத்தன்று கலியன் ஆராவமுதன் திருவடி தொழுவதென்கிற ஏற்றம் இந்த ஒரு தேசம் மாத்திரத்திலன்றோ ப்ரஸித்தியுடையது.

எம்பெருமான் தன்னால் மயர்வற மதிநல மருளப்பட்ட நம்மாழ்வாரது ஆராவமுதன் விஷயமான ஈடுபாடுகள் சொல்ல நிலமன்று; அறிவரிதே. முதலெடுப்பில் [illegible] ஸ்வாமதராய், அவ்வநுபவ ரஸம் வெள்ளமிட்டன்றோ 'ஆராவமுதே' என்கிறார். லோகத்தில் எத்தனையோ ரிஷிகளால் அநேக நாமங்கள் எம்பெருமான் விஷயமாய்க் [illegible] பண்ணப்பட்

186777.

டிருப்பது கேளா நின்ரேமிறே. இந்த ஆழ்வா ரொருவருக்கன்ரோ அவன் போக்யதைக்குத் தகுதியானபடி ஸர்வநாமாந்தர விலக்ஷணமாய், அநந்யார்ஹமாய், செவிக்கினிய செஞ்சொலினும் குழலின் மலியச்சொன்ன வோராயிரத்துள் இப்பத்தினும் இனியதாய், குழலூதுங்கால் கல்லும் நீராயுருகும், 'மாங்கள் நின்று மதுதாரைகள் பாயும்' என்ற கணக்கிலே த்ருடத்ரவ்யமும் த்ரவத்ரவ்ய மென்னலாம்படி உருகும் வண்ணமன்ரோ 'ஆராவமுதே' என்று அழைக்கத் தோன்றியது.

இந்தத் திருநாமத்தினுடைய போக்யதை தேசாந்தரஸ்தராய் பாஷாந்தரஸ்தராய் இருக்குமவர்களையும் ஈடுபடுத்து மென்கைக்கு ஓர் ஐயமில்லை. உத்தரபூமியில் லோகஸாரங்க மஹாமுனிகள் வர்த்தியாநிற்க, இங்குற்றையான் ஒருவன் அங்கேறச்செல்ல, 'பிள்ளாய்! தக்ஷிணபூமியில் விசேஷம் என்?' என்று கேட்க,' திருவாய்மொழி என்ருெரு ப்ரபந்தம் அவதரித்துச்சிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக்கொண்டாடிக் கொடுபோகா நின்ருர்கள்' என்ன, 'அதிலே உனக்குப்போவதொரு சந்தை சொல்லிக்காணுய்' என்ன, 'ஆராவமுதே என்கிற வித்தனையும் எனக்குப்போ' மென்ன, 'நாராயணுதி நாமங்கள் கிடக்க இங்ஙனே ஒரு நிர்த்தேச முண்டாவதே' என்று அத்ருப்தராய், இச்சொல் நடையாடுகிற தேசத் தேறப் போவோமென்று அப்போதே ப்ரப்பட்டுப் போந்தாரிறே.

ஆழ்வார்கள் எல்லாரினும் இவ்வாழ்வார் மிகப்பெருமை வாய்ந்தவர். அப்படியே எல்லா ப்ரபந்தங்களிலும் இவர் ப்ரபந்தம் மேன்மை பொருந்தியது. அதிலும் சரமப்ரபந்தமான திருவாய்மொழி உத்கர்ஷம் பெற்றது. அதிலும் பத்துப் பத்துக்கும் நடுநாயகம் போன்றது 'ஆராவமுதே'என்கிற திருவாய்மொழி. அவற்றிலும் இப்பாட்டு முதன்மை பெற்றது. அப்பாட்டிலும் முந்தறத் தோன்றிநிற்பது'ஆராவமுதே'என்னும் பதம். இப்படியிவன் பெருமை சொல்ல நிலமன்று. 'மாலே-நெடுமாலே-உருகுகின்ற நெடுமாலே-கரைய வுருகுகின்ற நெடுமாலே-நீராயலைந்து கரைய வுருகுகின்ற நெடுமாலே' என்றிறே இவர் அநுபவக்ரமமிருக்கிறபடி. மேலும், 'உன்னாலல்லால் யாவராலுங் குறைவேண்டேன்' என்றும், 'தொழுவனேனை யுனதாள் சேரும் வகையே சூழ்கண்டாய்' என்றும் 'உனதருளே பிரியாவடிமை யென்னைக் கொண்டாய் குடந்தைத் திருமாலே! தரியேனினி' என்றும், 'உன் சரணந்தந்தென் சன்மங் களையாய்' என்றும், ப்ரார்த்தித்த விடத்திலும் அவன் செவிதாழ்த்தா திருந்தானாக நினைத்து, அவனிட்ட ஆணையான சரமச்லோகத்தை, அதாவது 'மாமேகம் சரணம் வ்ரஜ। அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்பதை நினைந்து 'நீயே விபவாவதாரத்தில் க்ருஷ்ணனாய் அருளிச்செய்த அர்த்தம்

அழகியதாகப் பெற்றேன், துன்பம் களைவாய், என் கஷ்டம் போக்குவாய்,களைகண்மற்றிலேன், "அகிஞ்சநோ அநந்யகதி:" ரக்ஷகாந்தர முடையேனல்லேன், திருக்குடந்தை ரக்ஷகாந்தர ப்ரதிபத்தி நிவ்ருத்தி பிறந்தாரைச் சிதிலராம்படி பண்ணுமிட மென்கிற ப்ரஸித்தியை நிலை நிறுத்தி விட்டாயே" என்று இப்படிக் கூக்குரலிட்டார்.

இது கேட்ட அவனும் ஏது இவர் நம்மை ஒருபடியாலும் விடமாட்டார் போலிருக்கிறதே' என்று தன் திருவடிகளை உபாயமாகப்பற்றும் படியைக் காட்டித்தந்தார். அதைத்தான் மேல் 'இசைவித் தென்னையுன் தாளிணைக்கீழிருத்து மம்மானே!' என்றும் 'தீவினைகள் தீரவென்னையாண்டாய்' என்றும் அவன் "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை ஸத்யமாக்கிற படியை இனிது அநுஸந்தித்து அவன் திருவடிகளையே தான் ப்ராப்ய ப்ராபகத்வேந அத்யவஸித்தமையை, "கழல்க ளவையே சரணுகக் கொண்ட குருகூர்ச்சடகோபன்" என்று நிகமிக்கிருர். இவ்வைபவத்தை ப்ரதி ஸம்வத்ஸரம் மார்கழிமாதம் 15௨ திருவத்யயனோத்ஸவம் 15-ம் ஸேவை திருநாளில், 'திருமகள் மண்மகள் நீளை முதலாவெல்லாத் தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்க' 'தன்னனைய சூரிகள் தன்னடிக் கீழ் வாழ ஸ்ரீ ஆராவமுதாழ்வான் சேஷபர்யங்கத்தில் பரமபத நாதனுய் வீற்றிருக்கும் பெரிய திருவோலக்கத்திலே ஆழ்வார் "ஆராவமுவதே" என்று தொடங்கி, "களைவாய் துன்பம்" பாட்டளவாக அநுஸந்தித்துகொண்டு ஆராவமுதன் பரிஸரத்துக்கு எழுந்தருளி, "இசைவித் தென்னை" என்கிற பாசுராரம்பத்தில், பெருமாள் திருவடி தொழுவதை ஸேவித்தால் இப்பொழுதும் விசதமாய்க் காணலாம்.

இப்படி இவருடைய அபிமாநாதிசயத்தால் இவருடைய பக்தி அதிகரித்து அது ச்ருங்காரமாகப் பரிணமித்து, தானான தன்மையையும் இழந்து, பிராட்டிதசையை அடைந்து, அதிலும், 'இனி காணித் தான் என்?' என்று முதிர்ந்த தசையை யுடையவராய், அவன் செய்த வற்றைச் சொல்லி அலற்றுகிருர் "தொல்லையம் சோதி" என்று.

"தொல்லைஞ்சோதிநினைக்குங்கால்
என்சொல்லளவன்றிமையோர்தமக்கும்
எல்லையில்லாதனகொப்பூழ்ச்செய்யும்
அத்திறம்நிற்கவெம்மாமைகொண்டான்
அல்லிமலர்த்தண் துழாயுந்தாரான்
ஆர்க்கிடுகோவினிப் பூசல்? சொல்லீர்
வல்லிவளவயல்சூழ்குடந்தை
மாமலர்க்கண்வளர்கின்றமாலே" [திருவாய்மொழி 8-2-6]

இப்பாசுரம் தமக்கு அத்யந்தம் அந்தரங்கைகளான தோழிகளைப் பார்த்துச் சொல்லுமதா யன்றோ இருப்பது. ஆனதால் தான் கண்டதை உள்ளது உள்ளபடியன்றோ சொல்லுகிறது?

[பாசுரார்த்தம்—பழமையாயும் அழகியதாயுமுள்ள தேஜஸ்ஸை உடையவன் என் வார்த்தையால் சொல்லத்தக்கவனன்று. இமைகொட்டாது பார்க்கும் தேவர்களுக்கும் அளவிறந்த ஸம்சயத்தை உண்டு பண்ணுகிற்கும். “தஸஹஸ்ரா ஸுராஸுரா: ஸோதாரம் யஸ்ய ஶக்தம் விஹாய । ஸாமேவ வத்ஸ ஜனஸ்ய கயம்யோஷித் கரிஷ்யதி ॥” என்கிறபடி அந்த உத்கர்ஷ மிருக்கச் செய்தே கொடிகளாலும் கழனிகளாலும் சூழப்பட்ட திருக்குடந்தையிலே ச்லாக்யமான தாமரைப் பூவை ஒத்த திருக் கண்கள் நித்ரை பண்ணுகின்ற அவன், என்னுடைய காந்தியை அபகரித்தான்; புஷ்பத்தோடு கூடிய சீதளமான திருத்துழாயையும் கொடுக்கிறானில்லை; அவனிப்படி நம்மைப் படுத்தின பின்பு மற்றொருவரைக் குறித்தோ ஆக்ரந்தநம் பண்ணுவது? சொல்லுங்கோள்.] நம்மைப் புகுற நிறுத்தி நலிந்தவன் வாசலிலே கூப்பிடாதே, ஏதேனு மொரு ஸம்பந்தமிலாதார் வாசலிலேயோ கூப்பிடுவதென்கிறாள். “கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போ”லிறே இவர்படியும். அதாவது ஆராவ்முதனையே தஞ்சமாக அடைந்து அவனும் நம்முடைய பாதிகளை ஏற்ற பின்பு நம் குறைகூற மற்ற வெம்பெருமான்களு முளரோ? என்றல்லவோ இவர் கருத்தாகத் தோன்றுகிறது.

இப்படி யெல்லா மிவர்க்குள்ள நிரதிசய மஹா விச்வாஸாதிகளாலே உபாயபூர்த்தி பெற்று அது பல பர்யந்த பர்யவஸாயியானமையை ஸ்வாநுபவத்திலும் நன்கு தெளிந்து, இவ்வளவிலும் ப்ரயாஸம் வேண்டாதே குடந்தையன் கோவலனுக்குக் குடியடியராய் இருக்கு மிருப்பே நிரதிசயாநந்த பூர்வக பரிபூர்ண ப்ருஹ்மாநுபவரூப மோக்ஷ ஸாம்ராஜ்யம் பெறுகைக்கு ஸாதநம் என்பதை உட்கொண்டு, குடந்தையின் கோவலன் குடியடியார்க்கோ, அர்ச்சிராதி கதியில் மடந்தையர் வாழ்த்தலும், மருதரும் வசுக்களும் தந்தாம் எல்லை கடந்தும் தோத்திரம் சொல்லினரென்று அருளிச்செய்து, பின்னரே ப்ரபந்தத்தை நிகமித்தருளினரென்பதும் ஸம்ப்ரதாயாபிஜ்ஞர்கள் கொண்டாடும் விஷயமாகும்.

‘செந்தமிழ் பாடுவார்’ என்றும், ‘இன்கவி பாடும் பரமகவிகள்’ என்றும், ‘பாட்டுக்குரிய பழையவர் மூவர்’ என்றும் கொண்டாடப்பட்டிருக்கிற முதலாழ்வார்களில் பூதத்தாழ்வாருடையதான,

“எங்கள் பெருமான்! இமையோர் தலைமகன்! நீ
செங்கண்நெடுமால்! திருமார்பா!—பொங்கு
படமூக்கி னாயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்
குடமூக்கில் கோயிலாக் கொண்டு.” [இயற்பா: 2-ம் திரு 97.]

என்ற ஸூக்தியும் இதுபோன்ற பேயாழ்வார் ஸூக்தியும் இவ் வெம்பெருமானைப் பரக்கப் பேசி அநுபவித்தது போற்றத்தக்கதே.

இவ்வண்ணம் ஏழு ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்தருளியதுமன்றிக்கே, ஆழ்வார்திறத்து, ‘தேவு மற்றறியே னென்ன மதுரகவி’போல் உள்ளன்பு வாய்ந்த கம்பநாட்டாழ்வாரும் இவ் வெம்பெருமான் கிடையழகைக் கண்டு அதிலாழ்ந்து

இடங்கொண்ட நெஞ்சத்திணங்கிக் கிடப்பன என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரைசூழும் மலர்ந்ததண் பூங்குடந்தை
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கண் தழலுமிழ்வாய்
படங்கொண்ட பாம்பணைப் பள்ளிக்கொண்டான் திருப்பாதங்களே.
[திருவெழுக்கூற்றிருகை]

என்று இவ் வழகு தன்னெஞ்சை விட்டு அகலாதிருக்க வேணு மென்று ப்ரார்த்தித்து இருக்கிறார். இந்தப் பாட்டு ப்ரபந்தத்தோடு படநபாடத்தில் இருந்து வருகிறதென்பதும் மிக ப்ரஸித்தியுடையதே.

இவைபோன்ற பெருமையுமன்றி மற்றைத் திவ்ய தேசத்தெம்பெருமான்கள் விஷயமாய் லுப்தமாய்ப்போன த்ரமிடச்ருதியை ஸ்ரீமந் நாதமுநிகள் முகமாய் ப்ரவர்த்திப்பித்து அவ்வெம்பெருமான்கள் பெருமைகளை எல்லோரும் அறியும்படி செய்வித்த மஹோபகாரத்தை நினைத்தால், நாதமுநிகள் தொடங்கி இன்றளவு முள்ளாரும் பின்புள்ளாருமான அபிஜ்ஞர்கள் ஆராவமுதன் விஷயத்தில் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களே யாவர். இப்படித் திவ்ய ப்ரபந்தத்தை ப்ரவர்த்திப்பித்து ஸம்ப்ரதாயத்தையும் ப்ரவர்த்திப்பித்த இந்த காரணத்தால் தான் ஸ்ரீமந் நாதமுநிகளும் இவைகளுக்கெல்லாம் நம்மாராவமுதனாலேயே அபிவ்ருத்தியென்று ‘செல்வம் மல்குதென் திருக்குடந்தை’யில் மாத்ரம் மார்கழி மீ முதல் தேதி முதல் இருபத்தொரு நாளில் திருவத்யயந உத்ஸவத்தை இவ்விடத்தில் நம்மாழ்வாரை திருப்ரதிஷ்டை செய்வித்து ப்ரதி ஸம்வத்ஸரமும் நடக்கும்படி செய்வித்ததுமன்றி” இவ்வெம்பெருமானுக்கு “ஆராவமுதாழ்வான்” என்று திருநாமஞ் சாத்தினா ரென்பதும் எல்லாரும் அறிந்த விஷயமே.

இவ்வர்த்தத்தைக் கொண்டே இன்றைக்கும் அர்ச்சனையில் உாவிபரு—ஷி ஊபஊகாப-நஃ என்று வழங்கப்பட்டு வருகிறது. ஆனதால்,

"தொண்டீர் எல்லீரும் வாரீர்
தொழுது தொழுது நின்றார்த்தும்."
"அண்டத்தின் முகடழுந்தவலைமுந்நீர்த் திரைதும்ப ஆவாவென்று
தொண்டர்க்கு மமரர்க்கு முனிவர்க்கு தானருளி உலகமேழும்
உண்டொத்த திருவயிற்றி னகம்படியில் வைத்தும்மை உய்யக்கொண்ட
கொண்டல்கை மணிவண்ணன் தண்குடந்தை நகர்பாடி யாடீர்களே"

வபெயூஃ ஸாஂநிஷு ஸாஷாஂ ஸதஂஷாஂ வாஷாவிஷீநாஷூத நாவெபஂ ।
ஸ்ரீ கூஂஹவொணெ நமவொதுவெஷிகு நிவஷாகூஷொவெஷுவநிஷாயொஷு ॥

—

ஓர் விஞ்ஞாபநம்.

ஸ்ரீ ஆராவமுதன் பெருமையைப் பலர் பலபடியாகப் பேசி இருந்தாலும் அவன் பெருமை பேசுவதில் ஸர்வ விதத்தாலும் அடியேனுக்கு யோக்கியதை இல்லையேயாகிலும், அவன் திறத்துள்ள காதல் அடியேனுக்குள்ள அநர்ஹதையையும் மறைத்து இவ் விஷயத்தில் அடியேனைத் தூண்டி விட்டபடியால், அதுபற்றி அடியேனும் ஸத்ஸம்ப்ரதாய பிஜ்ஞர்களான முன்னோர்களுடைய உபதேசமுகத்தால் க்ரஹித்த சிலஅம்சங்களையே விஜ்ஞாபித்துக் கொண்டாலும் கூட புத்தி மாந்த்யத்தால் இதில் ஏற்பட்டிருக்கும் எல்லாக் குற்றங்களையும் மஹாங்கள் பொறுத்தருளி அடியேனை அநுக்ரஹிக்கவேணுமாய்ப் ப்ரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

—

கின்றது; சாஸ்த்ரத்தைக் கொண்டு உண்மையான ஜ்ஞாநம் ஸம்பாதிக்கப்பட்டால் அந்த அவித்யையால் ஏற்படும் மறைவு நிவ்ருத்தமாகின்றது' என்பது அத்வைதிகளின் கொள்கை. அப்படிப்பட்ட மறைப்பின் நிவ்ருத்தி, ப்ரஹ்மம் ஸவிசேஷமாக இருந்தால் மாத்ரம் ஸம்பவிக்கும் என்பதுதான் இவ்விடத்திற் செய்யப்படும் நிருபணம். இந்த நிருபணத்தின் ப்ரக்ரியை பின்வருமாறு காணப்படும். கயிற்றைப் பார்த்துப் பாம்பு என்று ப்ரமிப்பது போலன்றோ ஜகத்தில் காணப்படும் பல விதங்களான வஸ்துக்களின் தோற்றம்? ப்ரஹ்மம் எப்பொழுதும் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட ப்ரமத்திற்கே இடமில்லை யாகையால், ஜகத்தில் காணப்படும் ப்ரமத்தை விளக்குவதற்காக நீங்கள் அவித்யையை அங்கீகரித்திருக்கிறீர்கள். அந்த அவித்யையால் ப்ரஹ்மம் மறைக்கப்படும்பொழுது, அந்த ப்ரஹ்மம் முழுவதும் மறைக்கப்படுகின்றதா? இல்லாவிட்டால் ஒரு அம்சம் மாத்ரம் மறைக்கப்படுகின்றதா? 'ப்ரகாசத்தை மாத்ரம் ஸ்வரூபமாக உடைத்தாயிருக்கும் ப்ரஹ்மம் பூர்ணமாக மறைக்கப்பட்டுத் தனது ப்ரகாசம் முழுவதையும் இழந்து விடுகின்றது' என்னில், அந்த ப்ரஹ்மம் இல்லை யென்றே சொன்னதாகி விடும். ஒரு அம்சம் மாத்ரம் மறைக்கப்படுகின்றது என்னில், நிரம்சமாயும் நிர்விசேஷமாயும் ப்ரகாச மாத்ரமாயுமுள்ள வஸ்துவினிடத்தில் இரண்டு ஆகாரங்கள் ஏற்படமாட்டா வாகையால், அது அஸங்கதமாகும். அம்மாதிரியான வஸ்துக்களில், ஒரு அம்சத்தில் மறைப்பும் ஒரு அம்சத்தில் ப்ரகாசமும் காணப்படுகின்றன என்று சொல்வது அஸங்கதமன்றோ? ஆகையால், ப்ரஹ்மம் வேண்டுமானால், அவித்யை வேண்டுமானால், அவித்யா நிவ்ருத்தியும் வேண்டுமானால், ப்ரஹ்மத்தை நிர்விசேஷ மென்று ஒத்துக்கொள்வது கூடாது.

அயூாஸ:—ஒரு பொருளின் பேரில் மற்றொரு பொருளின் தர்மத்தை ஆரோபிப்பது அத்யாஸம் என்று சொல்லப்படும். பூர்வம் வெள்ளியைப் பார்த்திருக்கும் ஒருவன், இப்பொழுது முத்துச் சிப்பியைப் பார்த்துவிட்டு, வெள்ளிக்கும் முத்துச் சிப்பிக்கும் தென்படும் சில ஸாத்ருச்யங்களைக் கொண்டு, இப்பொழுது பார்க்கப்படும் முத்துச் சிப்பியின்மீது வெள்ளியின் தன்மையை ஆரோபித்தால், அப்பொழுது அவன் ரஜதத்வத்தைச் சுக்தியின்மீது அத்யவஸிக்கிறான் என்று சொல்லக்கூடும். சுக்தி இவ்விடத்தில் அதிகரணம்; ரஜதம் அவபாஸிக்கப்படும் அர்த்தம்; அந்த அர்த்தத்திற்கு அந்த அதிகரணம் அயோக்யம். இம்மாதிரியான இடங்களில் அத்யாஸம் செய்யப்படுகின்றது என்று சொல்லுகிறார்கள்.

ந ஹி ரஜ—ஷூாமெவெ.........இம்மாதிரியாக அத்யாஸம் ஏற்படுவதற்கு அதிகரணத்தின் பூர்ணப்ரகாசம் விரோதிக்கும். அதிகரணம் எவ்விடத்தில் நன்றாக ப்ரகாசிக்கவில்லையோ, அவ்விடத்திலேயே அத்யாஸம் உண்டு. ப்ரஹ்மமாகிற அதிகரணத்தில் மித்யாரூபமான ப்ரபஞ்சம் அத்யவஸிக்கப் படுகின்றதென்றால் ப்ரஹ்மம் பூர்ணமாக ப்ரகாசிக்கவில்லை என்று சொன்னதாகிறது. 'இது கயிறு' என்று ஒருவனுக்கு நன்றாக ப்ரகாசம் ஏற்பட்டால், ஸர்ப்பத் தன்மையை அதில் அவன் அத்யவஸிக்கமாட்டா னன்றோ?

அத வவ.........அந்தக் காரணத்தினாலேயே, (அத்யாஸத்தை ஸாதிக்கும் பொருட்டே) அவித்யை என்று ஒன்று உண்டென்றும், அது ப்ரஹ்மத்தின் ப்ரகாசத்தை மறைக்கின்றதென்றும் அத்வைதிகள் சொல்லுகிறார்கள்.

ஸாஸ்நாதிகா அவித்யா அப்யுபகம்யதே। ததஸ்ய ஶாஸ்த்ரீய நிவர்த்தக ஜ்ஞாநஸ்ய ப்ரஹ்மணி திரோஹிதாம்ஶோ விஷய:; அந்யதா தஸ்ய நிவர்த்தகத்வம் ச ந ஸ்யாத்। அதிஷ்டாநாதிரேகி ரஜ்ஜுத்வ ப்ரகாஶநேந ஹி ஸர்ப்பத்வம் பாத்யதே। ஏகஸ்ய விஶேஷோ ஜ்ஞாநமாத்ரே வஸ்துநி

ஸர்ப்பத்தின் தர்மம் முதலியவை அதில் அத்யஸிக்கப்படமாட்டாவன்றோ? அந்தக் காரணத்தாலேயே நீங்கள், வஸ்து ஸ்வரூபத்தை மறைக்கும் ஸ்வபாவத்தையுடைய அவித்யை என்னும் ஒரு பதார்த்தத்தை ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகையால், சாஸ்த்ரத்தால் உண்டாகிறதாயும், வஸ்து ஸ்வரூபத்தின் மறைப்பை நிவ்ருத்திக்கிறதாயுமுள்ள ஜ்ஞாநத்திற்கு எது விஷயமாகின்றதென்னில், அந்த அவித்யையால் மறைப்பை அடைந்திருக்கும் ப்ரஹ்மத்தின் ஒரு அம்சமே அப்படிப்பட்ட விஷயமாகின்றது. அப்படி ப்ரஹ்மத்தின் ஒரு அம்சம் மறைப்பை அடைகின்றது என்பதை ஒத்துக்கொள்ளாவிட்டால், சாஸ்த்ர ஜந்யஜ்ஞாநத்திற்கு மறைப்பை நிவ்ருத்திக்கும் தன்மையே ஸம்பவியாமற் போய்விடும். அதிஷ்டாநமாகிற ரஜ்ஜுவில் இருக்கும் ரஜ்ஜுத்வம் ப்ரகாசித்தாலன்றோ 'ஸர்ப்பமோ' என்னும் ப்ரமம் விலகும். கேவலம் ஜ்ஞாநமாக இருக்கும் ப்ரஹ்மத்தினிடத்தில் 'ஒரு விசேஷம் சப்தத்தால் சொல்லப்படுகின்றது [அதாவது மறைப்பை அடையக்கூடிய ஒரு

அந்யதா தஸ்ய நிவர்த்தகத்வம் ந ஸ்யாத்—மறைக்கப்பட்டு அறியப்படாமல் ஒன்று இருந்தால் மாத்ரம், மறைப்பை நிவ்ருத்திக்கும் சாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்திற்கு நிவ்ருத்திக்கும் தன்மையை நாம் சொல்லக்கூடும். ஆச்சாதநம் இல்லாவிட்டால் நிவர்த்தகத்வம் எப்படி ஏற்படும்?

அதிஷ்டாநாதிரேகி ரஜ்ஜுத்வ ப்ரகாஶநேந—அதிஷ்டாநம் இவ்விடத்தில் ரஜ்ஜு; அதனுடைய தன்மையாகிற ரஜ்ஜுத்வம் ப்ரகாசித்தால் ஸர்ப்பத்வம் பாதிக்கப்படும். ஸர்ப்பத்வம் பாதிக்கப்படாமல் நின்றால் ரஜ்ஜுத்வம் ப்ரகாசிக்கவில்லை என்பது அநுமாநம். அதுபோல, ப்ரபஞ்சத்வம் பாதிக்கப்படாமல் இருக்கும் வரையில் ப்ரஹ்மத்வம் ஏதாவது ஒரு அம்சத்திலாவது ப்ரகாசிக்காமல் இருக்கவேண்டும்.

ஏகஸ்ய விஶேஷ:........அப்படி ப்ரஹ்மத்தினிடத்தில் ஒரு அம்சம் ப்ரகாசிக்காமல் இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டால், 'ப்ரஹ்மம் அம்சத்துடன் கூடியது, அதாவது விசேஷத்துடன் கூடியது' என்று ஒத்துக்கொண்டதாகிறது. அந்த விசேஷத்தின் ப்ரகாசத்தால் அத்யாஸம் நிவ்ருத்தமாகிறபடியால், அந்த விசேஷம் கேவலம் உபலக்ஷணமாக மாத்ரம் இராமல் விசேஷணமாகவே இருத்தல் வேண்டும். அப்பொழுது ப்ரஹ்மம் விசேஷண விசிஷ்டமென்றே அங்கீகரித்ததாக ஆயிற்று.

ஶப்தேநாபிதீயதே, ஸ ச ப்ரஹ்மவிஶேஷணம் பவதீதி, ஸர்வஶ்ருதி ப்ரதிபாதித ஸர்வ விஶேஷண விஶிஷ்டம் ப்ரஹ்ம பவதி। அத: ப்ராமாணிகாநாம் ந கேநாபி ப்ரகாரேண நிர்விஶேஷவஸ்துஸித்தி:।

நிர்விகல்பக ப்ரத்யக்ஷேऽபி ஸவிஶேஷமேவ வஸ்து ப்ரதீயதே;

அம்சம் உண்டு] என்பதை' ஒத்துக்கொண்டால், அது ப்ரஹ்மத்திற்கு ஒரு விசேஷணமாக ஆகிவிடுமாகையால், ப்ரஹ்மம், எல்லா ச்ருதிகளாலும் ப்ரதிபாதிக்கப்படும் ஸகல விசேஷணங்களுடனும் கூடியதாகவே ஏற்பட்டுவிடும். ஆகையால், ப்ரமாணத்திற்குக் கட்டுப்படுபவரெல்லாரும் 'நிர்விசேஷமாயிருக்கும் வஸ்து ஒரு ப்ரகாரத்தாலும் ஸாதிக்கப்படமாட்டாது' என்பதை அங்கீகரிக்கவேண்டும்.

ப்ராமாணிகாநாம்—ப்ரமாண சரணர்களாய்ப் புகுந்தால் ப்ரஹ்மத்திற்கு நிர்விசேஷத்வம் சொல்வது ஸாத்யமில்லை.

நிர்விகல்பக ப்ரத்யக்ஷேऽபி—நிர்விசேஷ வஸ்துவுக்கு ப்ரமாணம் இல்லை என்பதை நிரூபிக்க ஆரம்பித்து, சப்த ப்ரமாணம் இல்லை என்பதை இதுவரையில் நிரூபித்து முடித்தார். இனி, அதற்கு ப்ரத்யக்ஷ ப்ரமாணமும் இல்லை என்பதை நிரூபிக்க உபக்ரமிக்கிறார். பௌத்தர் முதலான சில மதஸ்தர்கள், ப்ரத்யக்ஷத்தில் நிர்விகல்பக ப்ரத்யக்ஷமென்று ஒன்று உண்டென்றும், அது எவ்வித விசேஷமுமில்லாமல் இருக்கும் ஒரு வஸ்துவை விஷயமாக உடையதென்றும் சொல்லுகிறார்கள். அது உண்மையாக இருக்கும் பக்ஷத்தில், நிர்விசேஷ வஸ்துவின் ஸித்தி அதனால் ஏற்படும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால், ஸ்ரீபாஷ்யகாரர், 'அது உண்மையன்று, யுக்திக்கும் விருத்தம்' என்று உபபாதித்து, நிர்விகல்பக தசையிலும் ஸவிசேஷமாகவே வஸ்து தோன்றுகின்றது என்று இவ்விடத்தில் நிரூபிக்கிறார்.

ப்ரத்யக்ஷமாவது—மனஸ்ஸல்லாத கண் காது மூக்கு முதலிய பாஹ்யேந்த்ரிய வ்யாபாரத்தால் உண்டாகும் யதார்த்த ஜ்ஞாநமே. இந்த ப்ரத்யக்ஷத்தை நிர்விகல்பகமென்றும் ஸவிகல்பகமென்றும் இரண்டு விதமாகப் பகுப்பது உண்டு. ஒரு வஸ்துவை நாம் நமது இந்த்ரியத்தைக் கொண்டு முதல் முதலில் க்ரஹிக்கையில் நமக்கு எந்த ஜ்ஞாநம் ஏற்படுகின்றதோ அதை நிர்விகல்பகமென்றும், அவ்விதம் ஒரு வஸ்துவை க்ரஹித்த பிறகு மறுபடியும் அந்த ஜாதியைச் சேர்ந்த மற்றை வஸ்துக்களை ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் ஸம்ஸ்காரத்துடன் க்ரஹிக்கும்பொழுது ஏற்படும் ஜ்ஞாநத்தை ஸவிகல்பகமென்றும் சொல்வார்கள். முதல் முதலில் ஒருவன் ஒரு பசுவைப் பார்த்தால், அப்பொழுது அவனுக்கு அந்தப் பசுவைப் பற்றி ஜநிக்கும் ஜ்ஞாநம் நிர்விகல்பகம்; பிறகு வேறு

பசுக்களைப் பார்க்கும்பொழுது அவனுக்கு அவைகளைப்பற்றி ஜநிக்கும் ஜ்ஞாநம் ஸவிகல்பகம். முதலில், 'பசு ஒரு விதமான அமைப்புடன் கூடியிருக்கின்றது' என்னும் ஜ்ஞாநம் மாத்ரம் ஜநிக்கின்றது; பிறகு வேறு பசுக்களைப் பார்க்கும்பொழுது, 'முன் நான் பார்த்த வஸ்துவில் எவ்விதமான அமைப்பு தென்பட்டதோ, அம்மாதிரியான அமைப்பே இவைகளிலும் தென்படுகின்றது' என்னும் ஜ்ஞாநமும் ஜநிக்கின்றது. இதை அநுவ்ருத்தி என்று சொல்வார்கள். அதாவது—நிர்விகல்பக தசையில் ஏற்படும் ஜ்ஞாநம் ஸவிகல்பகத்தில் ப்ரதிஸந்தாநம் செய்யப்படுகின்றது என்று சொன்னதாயிற்று. இரண்டு தசைகளிலும் அஸாதாரணமாயுள்ள ஒரு அமைப்புடன் கூடியிருப்பதாகவே பசுவின் ஜ்ஞாநம் ஏற்படுகையிலும், ஸவிகல்பக தசையில் 'அந்த அமைப்பு வேறு வஸ்துக்களிலும் அநுவ்ருத்திக்கின்றது' என்னும் ஜ்ஞாநம் அதிகமாக ஏற்படுகின்றது. நிர்விகல்பக தசையில் அந்த அநுவ்ருத்தி இல்லை என்பதுதான் இதன் தாத்பர்யம். இந்த அர்த்தத்தை ஸ்ரீபாஷ்யத்தில் பின் வருமாறு விவரித்திருக்கிறார்—"நிர்விகல்பகம் நாம ஏகஜாதீய த்ரவ்யேஷு ப்ரதமபிண்டக்ரஹணம்; த்விதீயாதி பிண்டக்ரஹணம், ஸவிகல்பகம் இத்யுச்யதே। தத்ர ப்ரதமபிண்டக்ரஹணே கோத்வாதே: அநுவ்ருத்தாகாரதா ந ப்ரதீயதே; த்விதீயாதி பிண்டக்ரஹணேஷ்வேவ அநுவ்ருத்தி ப்ரதீதி:"

நிர்விகல்பத்திற்கும் ஸவிகல்பத்திற்கு முள்ள வைஷம்யம் இவ்வாறு இருக்க, இதை அறியாமலே பௌத்தர் முதலான சிலர், நிர்விகல்பகம் என்பது முதல் முதலில் ஒரு வஸ்துவைப் பார்த்தவுடன் ஏற்படும் ஜ்ஞாநமாதலால், அது எவ்வித விசேஷமுமற்ற ஒரு வஸ்துவை விஷயமாக உடைய தென்றும், ஸவிகல்பக தசையில் ஜநிக்கும் ஜ்ஞாநம் பல வஸ்துவைப் பார்த்த பிறகு ஜநிக்கிறபடியால், அது அந்த வஸ்துக்களுக்குள்ள விசேஷங்களுடனேயே ஸ்புரிக்கின்றதென்றும் நினைத்து, 'நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்தில் நிர்விசேஷ வஸ்துவின் ஸித்தி ஏற்படுகின்றது' என்று வாதிக்கிறார்கள். 'அது தவறுதலான வாதம்; நிர்விகல்பக தசையிலும் விசேஷங்களுடன் கூடினவாகவே வஸ்துக்கள் தோன்றுகின்றன' என்பதுதான் இவ்விடத்தில் நிரூபிக்கப் படுகின்றது.

அந்த நிரூபணம் என்னவென்றால்—ஒரு வஸ்துவைப் பார்க்கும்பொழுது, அப்படிப் பார்ப்பது முதல் தடவையாக இருந்தபோதிலும், 'இந்த வஸ்து இப்படிப் பட்டது' என்றே தோற்றம் ஜநிக்கின்றது. பசுவைப் பார்க்கும் பொழுதெல்லாம், அது ஸாஸ்நா (மடி) முதலானவைகளுடன் கூடி யிருக்கின்றது என்றே தோன்றுகின்றதன்றோ? அப்படி ஒரு விசேஷத்துடனும் கூடியிராமல் தோற்றமே ஜநிக்காட்டா

தாகையால், எல்லா ப்ரத்யக்ஷங்களும் ஸவிசேஷங்களே. தவிரவும், நாம் ஒரு ஜாதியைச் சேர்ந்த ஒரு வ்யக்தியை ஒரு காலத்தில் பார்த்துவிட்டு, மற்றொரு காலத்தில் அந்த ஜாதியைச் சேர்ந்த மற்றொரு வ்யக்தியைப் பார்த்தால் அப்பொழுது, 'பூர்வம் நம்மால் பார்க்கப்பட்ட வ்யக்தியின் அமைப்புக்கு ஸத்ருசமான அமைப்புடன் கூடியதாகவே இந்த வ்யக்தி தென்படுகின்றது' என்று தோற்றம் ஏற்படுகின்றது என்பது அநுபவ ஸித்தம். அது அவ்விதம் ஸித்தமாக இருந்தால், அந்த அமைப்பின் ஸாத்ருச்யம் இப்பொழுது தோற்றுவதற்கு, ப்ரதம தர்சநத்திலும் அந்த அமைப்பு தோன்றியிருக்க வேண்டுமென்றோ? இந்தக் காரணத்தாலும் நிர்விகல்பக ப்ரத்யக்ஷமும் ஸவிசேஷம் என்றே ஏற்படவேண்டும். 'அப்படி இரண்டு தசைகளிலும் ஸவிசேஷமாகவே தோற்றம் ஏற்பட்டால், இரண்டு தசைகளுக்கும் வைஷம்யம் என்ன?' என்று கேட்டால், விசேஷத்தின் அநுவ்ருத்தியினுடைய ப்ரதீதி ஸவிகல்பகத்துக்கு உண்டு, நிர்விகல்பகத்துக்கு அந்த அநுவ்ருத்தியின் ப்ரதீதி இல்லை என்பது தான் அதற்கு ப்ரத்யுத்தரம். பசுவைப் பார்க்கும் பொழுதெல்லாம் கோத்வம் (பசுவின் தன்மை) என்னும் விசேஷமும் தோன்றுகின்றது; ஆனால் ப்ரதம கோ தர்சநத்தில் அந்த கோத்வத்திற்கு அநுவ்ருத்தி தோன்றவில்லை, இரண்டாவது கோ தர்சநத்தில் அந்த அநுவ்ருத்தி தோன்றுகின்றது என்பதுதான் அவைகளுக்குப் பரஸ்பரமுள்ள வைஷம்யம். கோத்வம் என்பது ஜாதி; அநுவ்ருத்தி ஜாதி அன்று. "ஸாஸ்நாதி ஸம்ஸ்தாநரூப ஜாதே: அநுவ்ருத்தி: ந ப்ரதமபிண்டக்ரஹணே க்ருஹ்யதே இதி ப்ரதமபிண்ட க்ரஹணஸ்ய நிர்விகல்பகத்வம், ந புந: ஸம்ஸ்தாநாதேரேவ ஜாத்யக்ரஹணாத்" என்பது ஸ்ரீ பாஷ்ய பங்க்தி.

தவிரவும், ஒருவனுக்கு ஒரு தடவை பசுவின் க்ரஹணம் ஏற்பட்டிருக்கையிலும், ஏதாவது ஒரு காரணத்தால் அந்த ஸம்ஸ்காரம் மலிநமாகி இருக்கும் பக்ஷத்தில், மற்றொரு தடவை அவனுக்கு அதன் க்ரஹணம் நேரும்பொழுது பூர்வம் க்ரஹிக்கப்பட்ட ஜாதியின் அநுவ்ருத்தி ஸம்பவியாதாகையால், இரண்டாவது தடவை நேரும் ப்ரத்யக்ஷமும் அவன் விஷயத்தில் நிர்விகல்பகமாகவே இருக்கும். ஆகையால் 'ப்ரதம பிண்ட க்ரஹணம் நிர்விகல்பகம், த்விதீயாதி பிண்ட க்ரஹணம் ஸவிகல்பகம்' என்று சொல்வதைக் காட்டிலும், அநுவ்ருத்தி தர்ம விசிஷ்டமாக இருப்பது ஸவிகல்பகமென்றும், அது இல்லாமல் இருப்பது நிர்விகல்பகமென்றும் அவைகளுக்கு வைஷம்யம் சொல்வது யுக்தமாக இருக்கும். இதைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும் தமது ந்யாய பரிசுத்தியில் "நிர்விகல்பக மேக ஜாதீய த்ரவ்யேஷு

அதஸ்ஸவிகல்பகே 'ஸோ(அ)யம்' இதி பூர்வாவகத ப்ரகார விசிஷ்ட ப்ரத்யயாநுபவ ஹேது: । வஸ்து ஸம்ஸ்தாந விசேஷ ரூபத்வாச்ச கோத்வாதே:, நிர்விகல்பக தசாயாமபி ஸம்ஸ்தாந ஏவ வஸ்து 'இத்தம்' இதி ப்ரதீயதே । த்விதீயாதி ப்ரத்யயேஷு தஸ்யைவ ஸம்ஸ்தாந விசேஷஸ்ய அநேக வஸ்து நிஷ்டதா மாத்ரம் ப்ரதீயதே ; ஸம்ஸ்தாந ரூப ப்ரகா

நிர்விகல்பக...உச்யதே—நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்திலும் ஒவ்வொரு வஸ்துவும் விசேஷத்துடன் கூடியதாகவே தோன்றுகின்றது. அப்படித் தோன்ருவிட்டால், ஸவிகல்பக ப்ரத்யக்ஷத்தில், 'அதுவே இது' என்று ஏற்கெனவே நம்மால் அறியப்பட்டுள்ள ஒரு ப்ரகாரத்துடன் கூடினதாகத் தோற்றம் தோன்றுவது அநுபபந்நமாகும். 'பசுவின் தன்மை' இத்யாதிகள் வஸ்துக்களின் ஒருவிதமான அமைப்பின் ரூபங்களே; 'இது இப்படிப்பட்டது' என்று அந்தந்த அமைப்புடன் கூடியதாகவே ஒவ்வொருவஸ்துவும் நிர்விகல்பக தசையில்கூடத் தோன்றுகிறபடியால், அந்தத் தசையிலும் கோத்வம் முதலியவைகள் தோன்றுகின்றன என்றே சொல்லவேண்டும். (ஆகையால் நிர்விகல்பகமும் ஸவிசேஷமே ஆகும்). இரண்டாவது முதலிய ப்ரத்யயங்களில், அந்த அமைப்பின் ஸாத்ருச்யம் பலவஸ்துக்களில் தொடர்ந்து இருப்பதாக மாத்ரம் (அதிகமாகத்) தெரியவரு

'ப்ரதமபிண்ட க்ரஹணே' இத்யாதி பாஷ்யஸ்ய உதாஹரண ஸம்யோஜநம்" என்று அநுக்ரஹித்து விட்டு, "அத ஏவ ஹி ஸ்ரீவிஷ்ணுசித்தைருக்தம் 'ஸம்ஸ்தாநாச்ரய ஸாமாந்ய க்ருத ஜாதீய ஜ்ஞாநம் ஸவிகல்பகம்'" என்று பூர்வாசார்யர்களுடைய அபிமதத்தையும் வெளியிட்டிருக்கிருர். நிர்விகல்பக ஸவிகல்பகங்களுக்கு வைஷம்யம் எதுவாக இருந்தபோதிலும், இரண்டு இடங்களிலும் ஸவிசேஷமாகவே க்ரஹணம் ஸம்பவிக்கின்றது என்பது ஸித்தம். ஆகையால் பௌத்தர்கள் சொல்லும் வாதத்திற்கு இடம் இல்லை.

கோத்வாதே:—கோத்வம் (பசுவின் தன்மை) என்பது ஜாதி. அது, பசுவின் க்ரஹணம் ஏற்படும் பொழுதெல்லாம் ஏற்படுகின்றது. இந்த ஜாதி, முதல் பிண்ட க்ரஹணத்திலும் தோன்றுகின்றது; இரண்டாவது முதலிய பிண்ட க்ரஹணத்திலும் தோன்றுகின்றது. ஆனால், இரண்டாவது க்ரஹணத்தில் அநுவ்ருத்தியின் ப்ரதீதி அதிகமான அம்சம். இதிலிருந்து ஜாதி வேறு அநுவ்ருத்தி வேறு என்பதை நாம் அறியவேண்டும்.

அநேகவஸ்து நிஷ்டதா—அநேக வஸ்துக்களில் இருக்கும் தன்மை. அதாவது—அந்த வஸ்துவின் அமைப்பினுடைய ஸாத்ருச்யம் என்று சொன்னபடி.

ரூபத்வாத் ஸம்ஸ்தாநஸ்ய அநேக வஸ்து நிஷ்டதயா அநேக வஸ்து விசேஷணத்வம் த்விதீயாதி ப்ரத்யயாவகம்யமிதி த்விதீயாதி ப்ரத்யயா: ஸவிகல்பகா இத்யுச்யந்தே ।

அத ஏவ ஏகஸ்ய ஸம்ஸ்தாநஸ்ய பிந்நாபிந்ந ரூபேண ஆநா

கின்றது ; அப்படி அந்த அமைப்பு பல வஸ்துக்களுக்கு விசேஷணமாக இருக்கின்றது என்பது இரண்டாவது முதலியப்ரத்யயங்களில் மாத்ரம் அந்த அமைப்பின் அநுவ்ருத்தியால் வெளிப்படுகின்றபடியால், இரண்டாவது முதலிய ப்ரத்யயங்களை ஸவிகல்பகங்களென்று நாம் சொல்லுகிறோம்.

அத ஏவ—ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக நேர்கிறபடியால் பேதாபேத மதத்தை நிரஸிக்கிருர். நிர்விகல்பக தசையிலும் ஸவிசேஷமாகவே தோற்றம் ஏற்படுகின்றது என்பதே அந்தப் பேதாபேத மதத்திற்கும் பாதகமாகிறபடியால், அதற்கு இவ்விடத்தில் ப்ரஸக்தி ஏற்படுகின்றது.

இந்தப் பேதாபேத மதம், பாஸ்கர மதஸ்தர்களிடமும் யாதவப்ரகாச மதஸ்தர்களிடமும் காணப்படுகின்றது. அத்வைதிகளாகிற சங்கர மதஸ்தர்களின் மதம் அபேத மதம்; விசிஷ்டாத்வைதிகளாகிற ஸ்ரீ வைஷ்ணவர்களின் மதம் பேத மதம்; யாதவ ப்ரகாச பாஸ்கர மதஸ்தர்களின் மதம் பேதாபேத மதம். இந்த யாதவ மதத்திற்கும் பாஸ்கர மதத்திற்கும் வைஷம்யம் என்னவென்றால்—பாஸ்கர மதத்தில், 'அசித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் உண்டு; ஆனால் அவை இரண்டும் ஸ்வாபாவிகங்கள். சித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் இருக்கையிலும் அபேதம் மாத்ரம் ஸ்வாபாவிகம், பேதம் ஸ்வாபாவிகமன்று, கேவலம் ஔபாதிகமே' என்று சொல்லப்படுகின்றது. யாதவ மதமென்னவென்றால்—'அசித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் ஸ்வாபாவிகமாக இருப்பதுபோல, சித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் ஸ்வாபாவிகங்களே; ஔபாதிக பேதம் என்பதே இல்லை' என்பது தான். (20, 21-வது பக்கங்களைப் பார்க்க.) ஆகையால் இந்த இரண்டு மதஸ்தர்களும் பேதாபேத மதஸ்தர்கள்.

இவ்விடத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் செய்திருக்கும் உபபாதநத்தைச் சரியானபடி அறிவதற்கு யாதவ பாஸ்கரர்களால் அங்கீகரிக்கப்படும் இந்தப் பேதாபேத மதத்தின் கொள்கையின் ஜ்ஞாநம் அவசியம் அபேக்ஷிதம். ஆகையால் அதை ஸங்க்ரஹமாக இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கிறோம். லோகத்தில் எல்லா வஸ்துக்களும் அவ்வவைகளின்

ப்ரதீதிக்கு அநுகுணமாகவே வ்யவஸ்தையைப் பெறுகின்றன. ஆகையால், வஸ்துக்கள் பின்னமாயும் அபின்னமாயும் அறியப்படும் பக்ஷத்தில், அவைகளுக்குப் பேதாபேதரூபமான வ்யவஸ்தை உண்டென்றே அங்கீகரிக்க வேண்டும். வஸ்துக்கள் பின்னங்களாயும் அபின்னங்களாயும் அறியப்படுகின்றனவென்பது அநுபவ ஸித்தம். மாடு, குதிரையைக் காட்டிலும் வேறுபட்டதே; ஆனால் மாடும் ம்ருக ஜாதியைச் சேர்ந்தது, குதிரையும் ம்ருக ஜாதியைச் சேர்ந்தது என்னும் காரணத்தால் அவை இரண்டும் அபின்னங்களென்றும் சொல்லலாம்; ஆகையால் குதிரைக்கும் மாட்டுக்கும் பேதாபேதமுண்டு. மண் என்பது வேறு, அதனுற் செய்யப்படும் குடம் வேறு; ஆனால், குடத்திற்குக் காரணம் மண்ணுகிறபடியால், காரணத்தை ஆலோசிக்கும்பொழுது அவை இரண்டையும் அபின்னங்களென்றும் வ்யவஹரிக்கலாம். இம்மாதிரி ஸகல வஸ்துக்களும், காரணத் தன்மையாலும் ஜாதியின் தன்மையாலும் அபின்னங்களாகவும் பின்னங்களாகவும் நமக்குத் தோன்றுகின்றன. இப்படி பின்னம் அபின்னம், இந்த இரண்டு ரூபமாகவும் தென்படாத வஸ்துவே லோகத்தில் இல்லையாகையால், எல்லா வஸ்துக்களையும் பின்னாபின்னங்களென்றே சொல்லவேண்டும்.

'இந்தப் பேதரூபம் அபேதரூபம் இரண்டும் பரஸ்பரம் விருத்தங்களாகையால் இவை ஒரே வஸ்துவில் ஒரே காலத்தில் எப்படி இருக்கக்கூடும்?' என்னில், அப்படி இரண்டும் இருப்பதாக நமக்கு ஏற்படும் ப்ரதீதியே அதற்கு ஆதாரம். அப்படி விருத்தாகாரங்கள் ஒரே வஸ்துவில் இருக்கமாட்டா என்பதற்கும் நம்முடைய அநுபவமன்றோ காரணமாகச் சொல்லப்படுகின்றது? அம்மாதிரியான ப்ரதீதியே, அவை இரண்டும் அப்படி பரஸ்பரம் விருத்தங்களாக இல்லாமல் ஒரே வஸ்துவில் இருக்கக்கூடும் என்பதற்கும் காரணமாகின்றது.

இவ்வாறு பிண்டங்களுக்குப் பரஸ்பரம் பேதாபேதத்தை உபபாதித்துவிட்டு, அவர்கள், ஜாதிக்கும் வ்யக்திக்கும், காரணத்திற்கும் கார்யத்திற்கும் கூட பரஸ்பரம் பேதாபேதம் உண்டு என்று சொல்லுகிறார்கள். இவைகளுக்குப் பரஸ்பரம் பேதம் வ்யக்தம்; அபேதமும் சற்று ஆலோசித்துப் பார்த்தால் புலப்படும். 'இந்தக் குடம் மண், இந்தக் கிரீடம் ஸ்வர்ணம்' என்றன்றோ ப்ரதீதி ஏற்படுகின்றது? மண்ணுடன் கூடிய குடம் என்றாவது, ஸ்வர்ணத்துடன் கூடிய கிரீடம் என்றாவது, ப்ரதீதி ஏற்படவில்லை. இப்படி ஜாதி வ்யக்திகளுக்கு ஸாமாநாதிகரண்யம் சொல்வதே ஜாதி வ்யக்தி இரண்டும் அபின்னங்கள் என்பதற்கு ஒரு ஹேது. ஜாதியை விட்டுப் பிரித்து வ்யக்தியின் உபலம்பம் ஸம்பவிக்கமாட்டாது; எப்பொழுதும் அவை இரண்டும் சேர்ந்தே காணப்படுகின்றன. அவைகளின் அபேதத்திற்கு இதுவும் ஒரு ஹேது. தவிரவும், வ்யக்திகளுக்குள் எவ்வளவு பேதம் இருந்தபோதிலும், ஜாதியைக் குறிக்கும் ஒரே சப்தத்தால் எல்லா வ்யக்

ரகு⁴வர ! யத³பூ⁴ஸ்த்வம் தாத்³ருஶோ வாயஸஸ்ய
ப்ரணத இதி த³யாலுர்யச்ச சைத்³யஸ்ய க்ருஷ்ண !

ந்ருஶம்ஸ:—தான் விரும்பின விஷயங்களில் வஞ்சகனாய் அன்றிக்கே தன்னை விச்வஸித்திருப்பார் பக்கல் க்ரூர கர்மாவாய் இருக்குமவன்.

பாபிஷ்ட²:—இதுக்கெல்லாம் அடி பாபருசியாய் அதிலே வ்யவஸ்திதனாய் இருக்கை. "பாவமே செய்து பாவியானேன்', 'ஒப்பில்லாத் தீவினையேன்', 'நானே நானாவித நரகம்புகும் பாவம் செய்தேன்', 'அஹமஸ்ம்யபராதா⁴நாமாலய:', 'பாபாநாம் ப்ரத²மோऽஸ்ம்யஹம்', 'நீசனேன் நிறையொன்றுமிலேன்' என்று அறிவுடையார் தந்தாமைப் பேசும்படியான பாபத்திலே நிஷ்டையுடையவன்.

அபாராத்³து³:க²ஜலதே⁴:—ஒருநாளிலே தொடங்கின துக்கமென்னுதல், மேலொருநாளிலே முடிவு காணுதல் செய்யுமதல்லாமையாலே, த்ருஷ்டிவிஷம் போலே காணவே பயமாயிருக்கிற துக்க ஸாகரத்தினின்றும்.

கத²முத்தீர்ண:—இதில் அழுந்திக் கிடக்கிற நான் கரையேற என்பதென்று உண்டோ? 'முத்தனார்' என்கிறபடியே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான தேவரே கரையேற்ற வேண்டுமென்கை.

தவ சரணயோ: கத²ம் பரிசரேயம்—துக்க நிவ்ருத்திக்கும் அக்ஷமனாயிருக்கிற நான் நித்யஸூரிகள் அடிமை செய்கிற தேவர் திருவடிகளிலே எங்ஙனே பரிசர்யை பண்ணுவேன்? துக்க நிவ்ருத்தியும் தேவருக்கே பரம்; அடிமை கொள்ளுகையும் தேவருக்கே பரமென்கை.

(63) ரகு⁴வரேதி—புத்தி பூர்வம் பண்ணின ப்ராதிகூல்யங்களைப் போக்கப்போமோ என்ன; காகாபராதத்தையும் சிசுபாலாபராதத்தையும் பொறுத்தருளின தேவருக்குப் பொறுக்கமுடியாதது உண்டோ என்கிறார்.

ரகு⁴வர!—சரணாகதி ரக்ஷணம் பண்ணிப்போந்த ரகுப்ரப்ருதிகள் ஸாதகரென்னும்படி சரணாகத ரக்ஷணத்திலே அதிகராயிருக்கை. ரகு ராக்ஷஸ ஸம்வாதத்தில் சரணாகத ரக்ஷணம் பண்ணிப் போந்தவர்கள் அளவன்றிக்கே, 'ஸுக்³ரீவம் ஶரணம் க³த:' என்றும், 'த்வயி கிஞ்சித் ஸமாபந்நே' த்ராணஶக்தி என்றுமிறே இவர்படி.

ப்ரதிபவ மபராத்து: முக்த! ஸாயுஜ்யதோ பூ:
வத கிமபத மாகஸ் தஸ்ய தேஸ்தி க்ஷமாயா: ॥ 63

தாத்ருஶ:—அப்படிப்பட்டவ னென்னும தொழிய அநுபாஷிக்கை தான் அஸஹ்யமாம்படி யிறே பண்ணின அபராதம்.

வாயஸஸ்ய—அபராதம் பண்ணுகைக்காக ப்ராப்தமான தேவத்வத்தை விட்டு நிஹீநமான திர்யக்த்வத்தைப் பரிக்ரஹித்தா னென்கை.

ப்ரணத இதி—'ஸ பித்ரா ச பரித்யக்த:' என்கிறபடியே இவனைப் பரிக்ரஹிக்கில் நமக்கு அநர்த்தமென்று ஸர்வரும் உபேக்ஷிக்க, புகலற்று 'ஸ தம் நிபதிதம் பூமௌ' என்கிறபடியே விழுந்தவனைச் சரணாகதனென்று ப்ரதிபத்தி பண்ணி. ருஷி "ஶரணாகத" என்றதும் ராமாபிப்ராயத்தாலே.

த்வம் தயாலு ரபூ:—ப்ருஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்காமளவிலே தேவர் 'க்ருபயா பர்யபாலயத்' என்கிறபடியே தயாளுவானீர். 'க்ஷிபாமி' என்றும், 'ந க்ஷமாமி' என்றும் பண்ணிவைத்த ப்ரதிஜ்ஞை பலியாதே தேவர் க்ருபா கார்யமே பலித்துவிட்டது பிராட்டி ஸந்நிதி யாகையாலிறே.

யச்ச—'ச' சப்தத்தாலே காகாபராதத்தைப் பொறுத்த அளவேயோ என்று உதாஹரணாந்தரத்தை ஸமுச்சயிக்கிறார்.

சைத்யஸ்ய—யது வம்ச பூதரில் காட்டில் சேதி குலோத்பவனென்று தன்னை உத்க்ருஷ்டமாக அபிமானித்திருக்கு மவன்.

ப்ரதிபவ மபராத்து:—காகத்தைப்போலே ஒருக்கால் அபராதத்தைப் பண்ணின அளவன்றியே ஜந்மந்தோறும் ப்ராதிகூல்யத்திலே வாஸநை பண்ணினவனுக்கு.

ஸாயுஜ்யதோ பூ:—'பஹூநாம் ஜந்மநாம் அந்தே' என்றும் 'அநேக ஜந்ம ஸம்ஸித்த:' என்றும் ஜந்மம் தோறும் ஆச்ரயித்தார் பெறும் பேற்றையிறே கொடுத்தது. ஸாயுஜ்யமாவது ஸமாந குணயோகம். 'ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ரபக்தா ஸ்தபஸ்விந: । கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: ॥'

நநு ப்ரபந்ந: ஸக்ருதேவ நாத!
தவாஹமஸ்மீதி ச யாசமாந: ।

முக்த!—'ஆயர் குலத் தீற்றிளம் பிள்ளை' என்கிறபடியே அபராதா நபிஜ்ஞனிறே க்ருஷ்ணன். அதுக்கு மேலே ஒரு பேற்றை முடிக்கிற தசையிலே ஸுகரூபமான வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கின ஏற்றம்.

தஸ்ய தே க்ஷமாயா: அபதம் ஆக: கிமஸ்தி—காலபேதத்தாலே தேவர் வேறே ஒருவனாகிறீர் அல்லீர்; தேவர் க்ருபைக்கு அவிஷயமான பாப முண்டோ? கிம் ஶப்தே. அபதம்—அஸ்தாநம்; அவிஷயம் இத்யர்த்த:.

வத—ஸர்வஜ்ஞரான தேவருக்கு மறுமாற்ற மில்லை. க்ஷமைக்கு விஷயீகரிக்கு மித்தனை என்கை.

(64) **நந்விதி**—ஸ்வதந்த்ரரான நாம் சிலர் திறத்தில் ஒன்றைச் செய்தோமென்றால் இதுவே மர்யாதையாகக் கடவதோ? என்ன, கடற்கரையிலே ஆச்ரித ஸாமாந்யத்திலே தேவர் பண்ணின ப்ரதிஜ்ஞை என்னை ஒருவனை யொழியவோ? என்கிறார்.

நநு ப்ரபந்ந:—'ஸக்ருதேவ' என்றத்தை ஸ்மரிக்கிறார். 'ஸக்ருதேவ' என்கிறதை 'ஸஹைவ' என்று ஆழ்வான் நிர்வஹிக்கும். அநாதி காலம் ஸம்ஸரித்துப் போந்த இவன் ஒரு ஜந்ம மெல்லாம் ப்ரபத்தியை அநுஸந்தித்தால் தான் ஸக்ருதென்கைக்குப் போருமோ? என்பர் எம்பார். பகவத் ப்ரபாவத்தைப் பார்த்தால் ஒருக்காலைக்குமேல் மிகை; ப்ராப்ய ருசி ப்ராப்தியளவும் அநுவர்த்திக்கும் என்பர் பட்டர்.

நாத!—ஒருக்கால் பண்ணின ப்ரபத்தி அமைகிறது வகுத்த நாதனாகையாலே. ஆபிமுக்ய மாத்ரமே அமைந்திருக்கிறது இழவுபேறு தன்னதான குடல் துடக்கு. அசரண்ய விஷயத்தில் ஆர்த்த ப்ரபத்திக்கும் பலம் ப்ராபகம். வகுத்த விஷயத்தில் த்ருப்த ப்ரபத்திக்கும் பல வ்யாப்தி உண்டு.

தவாஸ்மீதி ச யாசமாந:—அஹம் தவாஸ்மி—ப்ரத்யக் வஸ்துவானது கிஞ்சித்கரித்துத் தன் ஸத்தையை லபிக்க வேணுமென்று யாசிக்கை. உத்தரார்த்த ப்ரக்ரியையாலே கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கை. '[illegible]மும்

தவாநுகம்ப்ய: ஸ்மரத: ப்ரதிஜ்ஞாம்
மதேகவர்ஜம் கிமிதம் வ்ரதம் தே ॥ 64
அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்த
ப்ரேமப்ரகர்ஷாவதிமாத்மவந்தம் ।

ஶரணம் ப்ரபத்யே' என்று என்னுடைய வெறுமையை முன்னிட்டுக் கொண்டு ப்ரபத்தி பண்ணினேன். 'ஸதைகாந்திகநித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி' என்று ப்ராப்யாபேக்ஷையும் பண்ணினேன். இரண்டு பதத்தாலும் பக்தி ப்ரபத்திகள் இரண்டிலும் அதிகரித்த அதிகாரிகள் இருவரையும் சொல்லுகிற தென்பாரும் உண்டு.

ப்ரதிஜ்ஞாம் ஸ்மரதஸ்தவாநுகம்ப்ய:—'ஸக்ருதேவ' என்று கடற்கரையில் பண்ணின ப்ரதிஜ்ஞையை ஸ்மரியா நின்றுகொண்டு தேவருக்கு அநுக்ராஹ்யன்.

தே வ்ரதமிதம் மதேகவர்ஜம் கிம்— ஸர்வ ஸாதாரண பூதரான தேவருடைய அஸாதாரணமான இந்த ஸங்கல்பம் என்னை யொழிந்திருக்குமோ? கிம்ஶப்தே இன்னானையொழிய என்று விசேஷித்ததாகில் அன்றோ எனக்கு இழக்கவேண்டுவது. தேவர் ஸத்யஸங்கல்ப ராகையால் என்னை ரக்ஷித்தருள வேணுமென்கை.

(65) அக்ருத்ரிமேதி—'ராமோ த்விர் நாபிபாஷதே' என்கிற ஸங்கல்பத்தை விட்டீரே யாகிலும் பெரிய முதலியாரோடு வித்யையாலும் ஜந்மத்தாலும் உண்டான ஸம்பந்தத்தையே பார்த்தருளி என்னுடைய நன்மை தீமைகளைப் பாராதே விஷயீகரிக்கவேணு மென்ன, அதுக்குக் கண்ணழிவில்லாமையாலே அப்படிச் செய்கிறோ மென்று ஈச்வரன் அநுமதி பண்ண, தாம் அநுமதி பெற்றாராய் ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டுகிறார்.

அக்ருத்ரிம—க்ரியயா நிர்வ்ருத்த: க்ருத்ரிம:, தத்ரஹித: அக்ருத்ரிம: ஸ்வாபாவிக இத்யர்த்த:. குலந்தானே யோகி குலமாகையாலே நைஸர்கிக மென்கை. மெய்யான ப்ரேம மென்னவுமாம்.

த்வச்சரண—ப்ராப்த சேஷியான உன்னுடைய.

பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய
ப்ரஸீத மத்வ்ருத்தமசிந்தயித்வா ॥ 65

அரவிந்த—ஆச்ரிதர்க்கு இழியுந் துறையாய்ப் போக்யமான திருவடிகளை.

ப்ரேமப்ரகர்ஷாவதிம்—ப்ரேமாதிசய ஸீமா பூமியானவர். நமக்கு இதர விஷயங்களில் ப்ரேம மெல்லாம் இவர்க்கு வகுத்த விஷயத்திலே யிறே இருப்பது.

ஆத்மவந்தம்—பகவத் சேஷத்வம் ஸ்வரூபமாகவே ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாந முடைய ரென்கை. 'யதவந்தம்' என்னுமாப்போலே.

பிதாமஹம் நாதமுநிம்—குடல் துடக்கை யுடையராய்ப் பகவத் ஜ்ஞாந நிதியாய் உள்ளவரை.

விலோக்ய—கடாக்ஷித்து.

ப்ரஸீத—அபராதங்களைப் பொறுத்தருள வேணும்.

மத்வ்ருத்தமசிந்தயித்வா—அஸத் கர்மத்தை விஸ்மரிக்கக் கடவராக வேணுமென்கை. 'மத்வ்ருத்த' மென்று ஸத்கர்மத்தை நினைக்கிறது. வ்ருத்தவா னென்றால் ஸத்கர்ம வ்ருத்தனையிறே சொல்லுகிறது. ஸ்வகதமானவற்றை அநாதரித்துப் பெரிய முதலியார் ஸம்பந்தம் எனக்குத் தஞ்சமாக வேணுமென்று ப்ரார்த்தித்து ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டி யருளுகிறார்.

யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாசேஷ கல்மஷ: ।
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம் ॥

॥ ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம் ஸம்பூர்ணம் ॥

ஸ்ரீமத்யாமுநமுநயே நம:

ஸ்ரீ:

அகாராதி க்ரமப்படி ச்லோகங்கள்.

	ச்லோகம்.
अ	
अकृत्रिमत्वच्चरण ...	65
अचिन्त्यदिव्याद्भुत ...	45
अनिच्छन्नप्येवं ...	59
अपराधसहस्र ...	48
अपूर्वनानारस ...	44
अभूतपूर्वं ...	25
अमर्यादः क्षुद्रः ...	62
अवबोधितवान् ...	54
अविवेकघनान्ध ...	49
उ	
उदग्रपीनांस ...	34
उदीर्णसंसार ...	29
उपर्युपरि ...	19
उल्लङ्घितत्रिविध ...	16
क	
कदा पुनश्शङ्ख ...	31
कः श्रीः श्रियः ...	12
[illegible] ...	14
किं त्वेष ...	9
आ	
[illegible] ...	37
[illegible] ...	33

	ச்லோகம்.
ज	
जनित्वाहं ...	61
त	
तत्त्वेन यश्चिदचि ...	4
तत्त्वेन यस्य ...	7
तदहं त्वदृते ...	51
तया सहासीन ...	39
तव दास्यसुखैकसङ्गि ...	55
तवामृतस्यन्दिनि ...	27
तस्मै नमो ...	2
त्व	
त्वदङ्घ्रिमुद्दिश्य ...	28
त्वदाश्रितानां ...	20
त्वदीयभुक्त ...	42
त्वां शीलरूप ...	15
द	
दासस्सखा ...	41
दुरन्तस्यानादेः ...	53
ध	
धिगशुचिमविनीतं ...	47

உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

நகை வர்த்தகர்கள்.



தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை

காட்சி அறை.

25, சைனாபஜார் ரோட், மதராஸ்.

நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.

காட்லாக்குக்கு எழுதுங்கள்.



ச்லோகம்.

ந

ந தேஹம் ந ப்ராணாந் ... 57
ந யத்ர ப்ரவிஶோத்யுதி ... 22
ந நிம்ஷிதம் கஶ்சித் ... 23
நநு ப்ரபஞ்ச: ... 64
ந ரூஷாவரோயசைவ ... 50
நமோ ஹிரண்யாஹூத ... 1
நமோ நமோ வாஜ்நவ ... 21
நாவெக்ஷெ யதி ததோ ... 10
நிஜஜ்தோநந ... 24
நிராலக்ஷ்யாவி ... 26
நிவாஸயயாஸந ... 40

வ

வித்தா க்ஷம் ஊதா க்ஷம் ... 60
ப்ரபஞ்சோ ஜ்ஞாம்பஞ்ஜ ... 35

ஹ

ஹவநஶேவாநாஞாரு ... 46
ஹமெயோ நமோஸ்வரிஶித ... 3

உ

உஉ நாய யதஷ்டி ... 53
ஊதா வித்தா யாவதய: ... 5

ச்லோகம்.

ய

யஜ்ஞஜ்ஞோஞா ... 11
யதா பூர்வமயி ... 8
யந்ருஷ்டிஷு ச ... 6

ர

ரவாவர யதஹஸ்லோம் ... 63

வ

வவாராஜிஷா ... 52
வஶீ வஷாத்யா ... 18
விராஜமாநோஜ்வல ... 32
விஶ்வாஸவிக்ராந்த ... 30
வெஷாவஹாரஞ்ர ... 13

ஸ

ஸ்கந்தத்வ ஊகார ... 56
ஸ்வர்க்கீலாஷ ... 36
ஸ்வெஸ்வரஸ்வெஷ்ண ... 38
ஸ்வாஹாவிகாநவயிக ... 11

ஹ

ஹதாவிருஷெம ... 43

18577

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மௌண்ட் ரோட், சென்னை.

விற்பனைக்குத் தயார்

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யாநத்துடன் கூடியது

விலை அணா 0 10 0

மற்றும் கீழ்கண்ட புஸ்தகங்களும் விற்பனைக்குத் தயார்.

ஸ்ரீ லக்ஷ்மீ சரித்திர ரகைஷ (தமிழ் மொழி பெயர்ப்புடன்)	0	14	0
ஸ்ரீ பரமபதஸோபானம் (தமிழ் வியாக்கியானத்துடன்)	0	8	0
ஸ்ரீ நம்மாழ்வார் வைபவம்	0	4	0

இப்புத்தகங்கள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,

திருவல்லிக்கேணி, சென்னை.

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.

தலைவலி — இருமல்

நரம்புவலி — ஜளிப்பு

முதுகுவலி — நெருப்புக்காயம்

இடுப்புவலி — காயங்கள்

கீல்வாயுவு — சுளுக்குகள்

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

பம்பாய் அமிருதாஞ்சனம் டிபோ, மதராஸ்.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால் வெளியிடப்படுவது.